

உ


ஓம் விநாயகநம



# சந்திரதீபம்

## சைவம் வளர்க்கும் தமிழ் பத்திரிகை

தருமத்தைக் காத்து தவத்தைப் பெருக்கி சிவத்தைப் பேணத் திருவருள் கொண்டது




சைவ ஆலயச் சிறப்பு மலர்

இதழ்: 3 சுடர்: 10

சித்தார்த்தி வருஷம் பங்குனி மீ 12 ம் உ

வெள்ளிக்கிழமை [28 - 3 - 1980]




# நாட்டில் எந்த ஒரு சைவக்கோயிலும் வேண்டாம் எனும் நிலை வந்துளது

## ஆர்வம், கோபம், குரோதம் இவை அகல வழிவகுக்கும் ஆலயங்களில்; இன்று இவைகளைப் பெருக்கும் இடமாக வந்துள்ளது. ஆதலின் கோயில் எதற்கு?

ஒருநாள் காலை ஒரு செல்வந்த குடும்பத்தைச் சேர்ந்த ஒரு சைவ அம்மையாரைக் கண்டேன், அவர் எமது பத்திரிகையை விரும்பிப் படிப்பவர். அவரிடம் என் பத்திரிகையை கொடுத்ததும் அவர் அதை வாங்கிக் கொண்டு என்னை நோக்கி "இந்த பாருங்கள் உங்களை ஒரு கேள்வி கேட்க விரும்புகின்றேன். அது என்னவெனில் திவ்விய ஜீவன சங்கத்தார் கோவிலுக்கு போய பிரயோசனமில்லை. அங்கு போகவேண்டாம் என்று பிரசாரம் செய்கிறார்களாம். அதில் ஈடுபடும் ஒருவர் என்னை நோக்கி நீங்கள் ஏன் கோயிலிற்கு போகிறீர்கள். அங்கு போக வேண்டாம் என்று கூறினார். இது சரியோ? என்றதே என் கேள்வி என்றார்.

நான் சொன்னேன் எங்கள் சைவநெறியில் கோயில்கள் தான் நெறியை வளர்த்து முத்தி தரும் இருப்பிடங்களாக இருந்தன அங்கு கடவுள் இருந்தவர் ஒழுங்காக வேத வழி தவறாது பூவும் நீரும் கொண்டு வழிபட்டு வருவார்க்கு கோயிலில் எழுந்தருளி இருக்கும் இறைவன் பல அற்புதங்களைச் செய்தவர். பல அன்பர்களுக்கு நேரிலே தோன்றி அநுக்கிரகம் புரிந்த வரலாறுகள் உண்டு. அதுவன்றி கோயிலில் இருந்த தெய்வங்கள் நாட்டு மக்களுக்கு தீங்கு நேராதபடி காத்து வந்தன. ஆனால் இன்று மிலேச்ச நாகரீகம் பரந்ததும் நம் மக்கள் அதில் ஊறி கோயிலில் வேத ஆகம நெறிகளைப் புறக்கணித்து பழியான செயல்களைப் புரிய தெய்வங்களும் அகன்றன. கோயில்களும் கலை நிகழ்ச்சி மண்டபமாயின. வீரசிங்கம் மண்டபத்திற்கும் இலங்கையிலுள்ள எந்தவொரு கோயிலிற்குமே வித்தியாசம் காண முடியாதபடி நிலை வந்துள்ளது.

இந்த மாற்றத்திற்கு மூலகாரணம் பிராமணர்கள். ஐயோ அவர்களது நடத்தை செயல் அத்தனையும் கோயிலைப் பாழாக்கி அங்குள்ள அருள் நிலையைக் கெடுத்து தெய்வங்களை அகலச் செய்துவிட்டது.

இந்தச் சண்டாளர் குலம் கோயிலை நாசம் செய்ய கலை நிகழ்ச்சி மண்டபமாக்க; சிறிது பரந்த அறிவுடையோர் இந்தக் கோவிலிற்கு போய் கும்பிட்டால் இந்த பழிகாரப் பிராமணன் மனநிலை நமக்கும் எய்தும். ஆகையால் நாம் அங்கு போகாது. நல்ல ஒழுக்க நெறி நின்றவருடன் கூடி நாம் பகவானை போற்றுவோம் என்று நினைக்கிறார்கள். அவர்கள் அப்படிச் செய்வதில் தவறில்லை.

## பொய்யர்களின் - கோவில் கல்லிலும் செம்பிலும் கடவுள் இல்லை
## மெய்யரது கருணையிலும் சீலத்திலும் - கடவுள் உள்ளார்

நானே ஒரு கோயிலிற்கும் போவதில்லை. நல்லூருக்கு போவதில்லை. திருக்கேதீச்சரம் போவதில்லை. ஏனென்றால் அங்கு நான் போனால் என் மனம் பழுதடையும். அங்கு போய் பழிகாரப் பிராமணன், கோயில் சொத்தில் சீவனம் நடத்தும் பாவி நிர்வாகிகள் இவர்களைக் காண்பது எனக்குத் தோஷம் வருவிக்கும் என நினைக்கின்றேன.

எனது நினைப்பைச் சரி என்று ஸ்மிருதிகள் வலியுறுத்துகின்றன. நாயன்மார் காலத்து கோவிலை என்ன சிறப்பாக தொண்டு என்ற அடிப்படையில் வைத்திருந்தார். கோவில் கூட்டுவது மெழுகுவது பூக் கொய்வது மாலை கட்டுவது பூசை செய்வது இவை இறைவனிடம் அன்புள்ள பெருமக்களால் வேதனம் சம்பளம் என்ற பேச்சிற்கு இடமின்றி செயல்பட்டு வந்தன.

பெரிய புராணம் இதை நன்கு தெளிவுறக் காட்டுகிறது. அடுத்து தொண்டு செய்வார் அனைவரும் ஞானம் உடையவராக தூய ஒழுக்கமுடையவராக பத்தி சிரத்தை உடையவராக இருந்தனர்.

அன்று தொண்டர் செய்த தொண்டுகள் இன்று மிண்டர் (பண ஆசை பிடித்தவர்) கையில் இருக்கிறது. எந்த ஒரு கோவிலில் எந்த ஒரு சிறு பணிவிடை செய்வோர் சம்பளம் பெறாமல் செய்கிறார். எங்காகிலும் ஒருவரை தொண்டு செய்வார் இவர் என்று காட்டலாமோ?

நெருப்பிலும் கொடியது கோயில் சொத்து! அதனிலும் கொடியது கோயில் பேரில் அலலது இறைவன் பேரில் பொய் சொல்லிப் பணம் பெற்று சீவனம் நடத்தல்.

இப்படியாக கடவுள் பேரில் பொய் சொல்லி ஏமாற்றிப் பணம் பெற்று வாழ்ந்த பல குடும்பங்கள் நாசமானதை நாம் அறிவோம்.

இன்று பல பிராமணர்கள் குடிகாரராகவும் துாநடத்தை உடையவராகவும் மாறவேண்டி வந்ததின் காரணம் அவரோ அல்லது அவர் முதாதையரோ கோவில் பேரில் களவு ஏமாற்றம் செய்த காரணத்தால் வந்தது எனலாம். இது உண்மை! பிராமணன் பிழை விட்டு பழுதாக எதை விரும்புவான்? அவன் இன்னமும் பழுதையே விரும்புவான். எனவே எமது சைவ மக்கள் ஆலயங்களிற்கு சென்றால் ஒருவிதமான தவறுகளையும் செய்யாதீர்கள். இது உங்களை நாசப்படுத்திவிடும். அருமையாய்க் கிடைக்கும் மனிதப் பிறவி இனி ஒருக்கால் வராது. பதில் நாயாக மாடாக இன்னும் கேவலமான பல பிறப்பாக வந்து சேருமென பெரியோர்கள் நூல்கள் மூலம் தெரிவிக்கின்றனர். இவ்வகையான நூல்களைச் செய்வதில் அந்தணர் முதலிடம் வகுத்தனர்.

ஆனால் இன்று அத்தகையோர் வழித்தோன்றல்களாகிய பிராமணர் அந்நூல்களை நம்பாது மேலநாட்டு வெள்ளைக்கார நாகரிகத்தை நம்பி அவர்களைப்போல் நடந்து கோவிலை மதியாது எதையும கோயிலில் செய்யலாம். அதில் ஒரு தீங்கு இலலை என்று பலருக்கும சொல்லிப் பழிமேல் பழியை ஆலயங்களில் செய்கிறார்கள்.

பொதுமக்கள் பாவம் என்செய்வார். பிராமணன் பிழையும் செய்யலாம் கோயிலில என்று சொல்ல. அதுகள் வேறுவகையின்றி இன்னும் பல பிழையைச் செய்தனர். இன்று எந்த ஒரு கோயிலிலாவது ஒலி பெருக்கி லைற் அடிப்போர் தனது தந்தையை அல்லது தாயை முன்னறிதெய்வமென நினைக்கின்றாரோ? அல்லது தனது குடும்பத்தில் சீராக வாழ்கிறாரோ! மறைவிலாவது மது அருந்தாது இருக்கிறாரா? இத்தகைய பிராமணரின் மனைவிமார்கள் கணவர்மாருக்கு விசுவாசமாகப் பத்தினியாக இருக்கிறாரோ? அல்லது அவர்களின் பிள்ளைகள் பத்தினியாக இருக்கிறாரோ? நான் இன்னும் ஓர் இடத்திலும் காணவில்லை! இதை இன்று வெளிப்படையாகச் சொல்லவேண்டி வருவதன் காரணம் கோவிலில் பழி பாவத்திற்கு அஞ்சாது எதையும் செய்வார் எப்படியான நிலையில் இருக்கிறார்! இது சரியோ? எனக் காட்டுவதற்காகும்! எமது சமயம பாது காக்கபடவேண்டும் எனின் பிராமண சமூகம் வேதநெறியுடன் நடக்க வேண்டும்! அல்லது தமது தொழிலை அப்படியே விடவேண்டும். பூணூலை அறுத்து குடுமியையும் வெட்டிவிட்டு எப்படியாவது நடக்கட்டும். அவர்களைப்பற்றி இங்கு எமக்கு அக்கறையில்லை.

பிழைசெய்வார் தமது பிழையை உணர்ந்து திருந்தவேண்டும். ரோசத்தின் காரணமாக இவர்சொல்லி நான் திருந்துவதோ என நினைப்பவர் இன்னும் பல பிழைகளைச்செய்து நாட்டுக்கு ஒரு கொடிய விலங்காவர்; ஔவைப்பிராட்டியும் "தீங்குடையார் கண்ணில் நாம் பட்டுக்கொள்ளாதபடி தெரியாத தூரத்தில் போய் விடுதல் நல்லது" எனச் சொன்னார், ஆனதன்மையினாலே இன்று இத்தீய பிராமணர் பூசைசெய்யும் கோவிலுக்குப் போகாதுவிடுதல் நன்மையே அன்றித் தீங்கில்லை. தீங்குடைய பிராமணர் பூசைசெய்யும் கோவிலில் உபயம் செய்யாது விடுவதால் ஒரு தீங்கும் இல்லை. குளத்தைச் சேறுக்கியபின் அங்கு அறிவாளி குளிக்கச் செல்வானா? அழுக்கை அகற்றப் போய் அழுக்கைப பூசுவாரா? எந்த ஒரு பேதையர் இதைச் செய்வார்? பழையானவழி நடத்தப்படும் கோயிலுக்குக் கும்பிட எந்த ஒரு பெரியவனும் போகான். இப்படி எம் முன்னோரும் நடந்துள்ளனர்

நாயன்மார்காலத்தில் அருள்புலப்படும் ஆலயங்களில்தான் நாயன்மார் சென்று பணிந்து பாடியுள்ளனர். பொதுமட்டாக அவர்கள் எல்லாக் கோவிலையும் பாடவில்லை.

ஒரு காரியம் கேட்கிறோம். ஒலி பெருக்கி பாவிக்ப்படும் எந்தக்கோயிலில் அருள் இருக்கு? யாரும் காட்டட்டும். இநதியாவிலோ இலங்கையிலோ யார் தரிசித்துப் பேறுபெற்றனர் காட்டட்டும்.

பிழையான வழியில் பணம் சம்பாதிபபோர் பிழையான வழியில் அதனைச்செலவழிப்பார்; பிழையான வழிக்குத்தான் கொடுப்பார். நல்ல நெறிக்குக் கொடுக்கார். இன்று ஒலி பெருக்கி பாவிபபோரில் எவர் ஒருவர் பிழையானவழியில் பணம் திரட்டாதவர்? பிழையானவழி என்பது பொருளுக்குநிதானவிலை இல்லாதுசந்தர்ப்பததிற்கேற்ப அதிகவிலை விற்ற இருட்டுச் சந்தைக்காரர், அரசாங்கத்தை ஏமாற்றி கேள்விப்பத்திர மூலம் பணமீட்டியோர், கைக்கூலி வாங்குவோர், கள்ளக்கடத்தல் செய்வோர ஆகிய இவர்களது பணம் தான் பிராமணர்க்கு பழிபெருக்கி வாழ்வதற்குப் பணமாக வநதன. இதை வாங்கிய பாதகப் பிராமணன் இன்னும் பழிசெய்து சார்ந்தாரையும் கெடுததுவிட்டான். நாம் என்ன செய்யலாம்? பழுதான வழி பணமீட்டியவன் கொலையும் செய்ய அஞ்சான். அவனுக்குத் தருமம் தயை என்பது ஒருகாலமும் இருக்காது. அவன் தனது கருமம் நினைப்பானேயொழிய தருமத்தைப்பற்றி நினையான். கள்ளவழியில் தேடிய பணம்

நல்லதைப்பற்றிச்சிந்திக்கவைக்காது: இன்னமும் கெட்டதையே சிந்திக்க வைக்கும். ஆனதினாலே தீங்கான வழி நிர்வகிக்கப்படும் கோயிலுக்கு நாம் போதலைத் தவிராது நாம் இன்னும் போவதாய் இருநதால் தீங்கு செய்வதை நாம் ஊக்குவிககின்றோம். தீங்கு செய்வாரை இன்னும் பல தீங்குசெய்ய வழிவகுக்கிறோம்.

தக்கனது யாகத்தில் ஆக ஐந்தாறு பேர்தான் போகவில்லை. அதில் தசிசி முனிவர் ஒருவர். ஆனல் அவர் போய் இன்று நாம் சந்தரதீப மூலம் சொல்வது போல், தக்கனுக்கு நல்ல அறிவு சொன்னவர். ஆனல் அவனது அகந்தை அதை உணர விடவில்லை. அன்றே அவன் அவரை நோக்கி 'உங்களைப்போல் பேயருக்காக இவ்வளவுபேரும் சரியென்று இங்குவந்திருக்கின்ற இந்த யாகத்தை நான் கைவிடட்டோ' என்று கேட்டவன்.

தசிசி முனிவர் அதுகேட்டு மனம் நொந்துபோனவர், நடந்ததை நீங்கள் உணர்ந்து பாருங்கள். நாமும் என்ன செய்யலாம். இந்நியி சைவநெறியில் எம் ஆலயங்களில் பழுதுகள் நாள்தோறும் பெருகுகின்றன. இவை கும்பிடுவார் மனநிலையைக் குளப்புகின்றன. பிராமணன் செய்யும் தவறுகள் கும்பிடப்போவாரால் சகிக்கமுடியவில்லை. கல்லால விருட்சத்தின்கீழ்இருந்து எங்கள் சிவன் சொன்ன அறத்துக்கு முற்றிலும் முரணாக கோவிலில் நடக்கின்றன. ஆனதினாலே இவற்றைநீக்கி நன்மையைப் பெருக்கவையுங்கள் என முன்னர் பணிவாகக் கேட்டோம். இப்போது கடிந்து சொன்னோம். இன்னமும் திருந்தியபாடில்லை! கேட்டபாடில்லை. இனி வேறு வழியில்லை.

இனி மக்களைப் பழுதுவழி நடக்கும் கோயிலுக்கு செல்லாதீர் என்போம். அப்படிப் போனல் உங்கள் குடும்பங்களில் பின்னர் பெரும் கேடுகளை விளைவிக்கும். ஆகையினாலே எம்பிரான் ஆலயங்களில பயபக்தி மீண்டும் வரும் துணை ம் அந்தணர் திருந்தும் துணையும் நிர்வாகம் வியாபாரப் போக்கை தவிர்க்கும் துணையும் உண்டாகும்வரை அங்கு செல்லாது விடுதல் அன்றி, வேறு வழியில்லை.

ஒருவர் பத்துப் பிள்ளை பெற்றால் அதில் கூடியபாகம் தாய் தந்தையரை மதியாது, அடித்துத் துன்புறுத்தும் போது, அறிவுடைய பிள்ளை அவர்களது போக்கைக் கண்டும் அவர்களுடன் ஒத்துழைத்தால் தந்தை தாயாரின் நிலையென்ன? தந்தை தாயார் என்ன செய்யலாம்? ஆகையினாலே அறிவுள்ள பிள்ளை ஒன்றிருந்தால் அதன் செயல் தந்தை தாயாரை அடித்துத் துன்புறுத்தும் அவர்களுடன் ஒத்துழைகாமல் இருத்தலே நலமாகும். அவர்களை வெறுத்து நீக வேண்டும. அவர்கள் இருக்கும் இடத்திற்கு தாம் செல்லக் கூடாது. இதுதான் சிவதர்மம் இதையுணராது அதற்கென்ன தம்பி அடித்தால் அடிக்கட்டும: எனக்கு இன்றைய நிலையில் தம்பிதான் தேவை. தந்தையை மதிப்பது அந்தக்காலம்; இன்று அந்த நிலை தேவையில்லை என நினைத்து தீங்கானபிள்ளைகளுடன் ஒத்துழைத்தால் தருமம் என்னுகும்.

சைவத்தின் அடிப்படை தர்மம் என்பதை தீபத்தின் மூலம் பல தடவை கூறினோம். சைவத்தின் அடிப்படை நல்லோர் வகுத்த எக்காரியத்தையும் நம் முன்னெடுக்க வேண்டும். ஆகையினாலே ஆலயங்களில் கும்பிடச் செல்வோரது மனதைக் குளப்பும்படி ஒலிபெருக்கி பாடி பொப்பிசை பாடி வில்லுப் பாட்டுப் பாடி வேடிக்கை பலவும் செய்து விழா எடுத்தால் அது தருமமாகுமோ? எங்களுக்கு கோயிலிலே பிரசங்கம் வேண்டாம். கோயிலில் கும்பிட வருவாரைக் குளப்பும்படி அல்லது அயலைக் குளப்பும்படி ஒலிபெருக்கி பாவிப்பது, பெரும் பிரசங்கம் சினிமாப் பாடல்கள் ஒரு கோவிலிலும் வேண்டாம். இறைவனது பூசைகள் மங்கல நாதத்துடன் நடந்தால் அது பெரிது. பிரசங்கத்திற்கும் ஒலிபெருக்சிக்கும் செலவிடும் பணத்தை கோவிலடங்கிலும் நெய் விளக்கேற்றி பூமாலை முத்துமாலைகளால் அலங்கரித்து இறைவனுக்கு வித வித மா மாலைகளால் அலங்கரித்து முன்னின்று கும்பிடுங்கள். இது எவ்வளவு ஆனந்தமாகவும் இருக்கும். அதேவேளை மேபபாடான இல்லற வாழ்க்கைக்கும், மோட்ச ஈடேற்றத்திற்கும் இது துணைபுரியும்.

வெளிப்படையாகச் சொல்கிறேன் இன்று யாழ்ப்பாணத்தில் பிரசங்கம், வில்லுப் பாட்டு பொப்பிசை இவ்வளவும் மேடையில் செய்பவர்கள் மது அருந்துபவர், காம உணர்வு மிகுந்தவர், சைவ ஒழுக்கமில்லாதவர் பல பொய் சொல்கின்றவர்கள் கள்ளக் கடத்தலில் தங்கம் காசு கொண்டு செல்கின்றவர்களே. அதில் சிலர் சில இளைஞர்களுடன் தகாத வழியில் சிற்றின்பம் அனுபவிப்பவர். இப்பேர்ப்பட்டவர்களது பிரசங்கங்கள் விழுபபாட்டுகளுக்கு சனக் கூட்டமும் வரத்தான் செய்யும். ஆனல் இவர்களை கோவிலடிக்கு கூப்பிடுவதே பெரும் சிவத் துரோகமாகும் இதை நம் சைவமக்கள் உணர வேண்டும்.

வழியிருக்க வழிதவறி ஏன் நடப்பான். பல பொருட்களையும் சேகரியுங்கள், திருவமுதுக்கு நல்ல பொருட்களைச் சேகரியுங்கள். நீங்களும் திருவமுது செய்து படையுங்கள். நிறைய விளக்கேற்றுங்கள். சுவாமி எழுந்தருளும்போது நிறையப் பூமாலையால் யட்டும் அலங்கரியுங்கள். மங்கல வாத்தியங்கள் முழங்க அவரை வீதியுலாச் செய்யுங்கள். நலமுருகக் கும்பிட்டு பணியுங்கள். சுவாமிக்கு படைத்த பிரசாதத்தை வரும் அடியார்களுக்கு நிறையப் கொடுங்கள். சிறந்த பூசையை செய்து தரிசித்து மகிழுங்கள். தரிசிக்க வந்த அடியார் கையில் அமுது கொடுத்து மகிழ்வியுங்கள். இதை விடுத்து, ஒலிபெருக்கி, பிரசங்கம், பாட்டுக்கச்சேரி, வில்லிசை பொப்பிசை கூத்து இவை யாவும் பழியான செயல்கள். இப்பழியான செயலுக்கு உற்ற பயன் உடன் தெரியாது. நாளடைவில் தெரியும் ஆனதினாலே நான் இவ்வாறு கூறிவிட்டு அவ்வம்மையிடம் சொன்னேன். திவ்விய ஜீவன சங்கததினர் கோயிலுக்குப் போக வேண்டாம் என்று சொல்வதற்குக் காரணம் இன்றுள்ள கோயில்களின் நிலையே! அருளைப் பெறுவதற்கு கோயில்தான் சரியான இடம். ஆனல் என்ன செய்வது? நம் பேதை நிர்வாகிகளும் பிராமணனும், பிரசங்கிகள் – பொப்பிசை–வில்லிசை நாடகக் கூத்துக்காரர்களும் நம் ஆலயங்களை கெடுத்துவிட்டார்கள்

திவ்விய ஜீவன சங்கத்தினர் கூட்டுப்பிரார்த்தனை ரீதியில் கும்பிடலாம்; கோயிலுக்கேன் போவான் என்ற கருத்தில் கூறியிருக்கலாம். அவர்களும் ஒலிபெருக்கியில் தான் பிரார்த்தனை செய்கின்றனர். மிலேச்ச நாகரீகத்தை மெய்யென நம்புகின்றனர். அந்த நிலையில் அவர்கள் சொல்லியிருக்கலாம். எனென்றல் சில வேதாந்த சாமிகள் கோயிலில் கண்டதென்ன என்று கேட்கிறார்கள். ஆனல் நிலை பேறகிய நித்தியத்துவத்தைப்பெறுவதற்கு கோயில் சென்று வழிபடுதல்தான் சாலவும் சிறந்ததென்று திருநாவுக்கரசர்முதல் பல பெரியோர்கள் சொல்லியுள்ளார்கள். இதை எண்ணும்போது என்மனம் வேதனைப்படுகின்றது. அன்று திருநாவுக்கரசர் காலத்திலிருந்த அருள் நிலையையும் இன்று கோயிலில் பொப்பிசையும் பிரசங்கமும் வில்லுப்பாட்டும் பிராமணரது குளப்படிகளும் நிறைய இருக்கின்ற காலத்தையும் சிந்திக்கவே அந்த வேதனை வருகின்றது நாம் என்செய்யலாம்.

ஆலயங்களிலே இத்தீங்குகளைபெருக்குகின்ற தீவினையாளர் சிதைவாகிப்போதும் காலத்தை எண்ணி அது எப்போது என்று எம்பெருமானை வேண்டி அவர் அருளாலே இன்று பல பழுதுகளையும் பெருக்கும் பரமாச்சாரியபாதர் சிவத்தமிழ் பேதைகள் பொப்பிசை கோணங்கிகள் வில்லிசைக் மோமாளிகள் ஆலயங்களில் புகமுடியாத நிலையில் சில ஆலயங்ககளை நிர்வகிக்கும் நல்ல நிர்வாகிகளது அறிவிலே ஒரு நற்கருத்தைத் திருவருள் தோற்றுவித்து எம் சைநெறியை திருவருள் பாது காக்குமென நம்பி இருக்கிறோம். கல்லுவைத்த இடமெல்லாம் பூவும் நீரும் வைத்து வழிபடும் பெருமைகள மீண்டும் சிறந்து தற்போது கல்லுவைத்த இடமெல்லாம் சூழ்ந்து கொண்டுள்ள பிரசங்கம், பொப்பிசை, வில்லிசை அத்தனையும் அழிதொழியட்டும். அதனைச் செய்வோரும் செய்விப்போரும் அழிந்தொழியட்டும் என்று அசுரர்களை மாய்த்து வேத நெறியைத் தழைக்கவைத்த ஆறுமுகப் பெருமானை வேண்டிக் கொள்வோமாக

திருச்சிற்றம்பலம்
திருச்செம்பொன்பள்ளி
திருநேரிசை [4–ம் திருமுறை]

**ஊனினுள் உயிரை வாட்டி உணர்வினார்க் கெளிய ராகி**
**வானினுள் வான வர்க்கும் அறியலா காத வஞ்சர்**
**நானெறிற் றானே யென்னு ஞானத்தார் பத்தர் நெஞ்சுள்**
**தேனும்இன் அமுது மானார் திருச்செம்பொன் பள்ளி யாரே.**

தவம் செய்யும் விரத நோன்மைகளால் ஊன் பொருந்திய உடம்பில் இருக்கும் உயிரை இன்னமும பிழைவழி போகாது நல் நிலைப்படும்படி வாட்டி பதமுறுத்தி பின்னர் உணாகின்ற பெரும் பெரியோராகும் மக்கள் அனைவர்க்கும் மிகஇலகுவில் பெறக்கூடியவராகி நிற்பர் சிவன். இதுவன்றி வான உலகில் வாழ்கின்ற பெரும் தேவர்கட்கும் அறிந்திட முடியாதபடி தன்னைக் காட்டிக் கொள்ளாத வஞ்சகர் அவர். நான் என்றதல்லாது தான் தான் நான் என்னும் ஞான உணர்வுடைய பத்தர்கள் நெஞ்சத்துள்ளாக இருந்து கொண்டு தேனும் இனிய அமுதும் போலத் தித்திக்கும் ஒருவராகவே இருக்கிறார் திருச் செம் பொன் பள்ளி என்னும் தலத்தில் இருக்கின்ற கடவுள் எம் சிவமூர்த்தி.

ஊன் பொருந்திய உடம்பில் உயிர் இறுமாப்பு முதல் பல தீமைகளால் கடினமாகுவது. இந்தக் கடினம் உலக போகங்களால் இன்னமும் மிகுவது. ஒரு இலைதளிர்த்து இருக்கும் போது கடினமாக இருக்கும். வளைத்தால் அல்லது சுருட்டினால் முறியும் அல்லது நொறுங்கும். அதேபோல் கடினமான சித்தம் வளையாது. அப்போது அந்த சித்தத்தைத் தரும் உயிரை தவத்தின் சார்புடைய அவாவின்மை அடக்கம் உண்மை பேசல் தருமம் தயை தியானம் முதல் பல செயலைப் புரிய கடினமான சிந்தையைத் தோற்றிய உயிர் வாடும் உயிர் வாட சிந்தையும் வாடும். சிந்தை வாட சிவனை நினைப்பதற்கு அது இலகுவாகிறது. ஆனதினாலே ஊனினுள் உயிரை வாட்டி உணரும் உணர்வுடையார்க்கு இலகுடையவராகத் தோன்றுவார் எம்பிரான் சிவன் என்றார். இதனையே நான் எனில் அது வராது! ஆகவே ஞானிகள் தம் உள்ளத்தை பக்குவப் படுத்த தவ விரதங்களை மேற்சொண்டு உயிரை வாட்டினால் உயிராத் தான் என்ற தன்மையை தன்பாட்டில் நீங்கும். நீங்கிட சிவசம்பந்தம் ஏற்படும்! இந்த நிலையில் அது அளவிறந்த சிவபோகமாக சித்தத்துள் தித்திக்கும். ஆதனினால் தேனும இன்னமுதுமாவார் திருச் செம் பொன் பள்ளியில் இருக்கும் கடவுள் என்றார்.

இன்று திருச் செம் பொன் பள்ளி என்னும் தலத்துள் அப்படியான கடவுள் இருப்பாரா? அப்படி இருந்தாலும் பணவாஞ்சை படித்த தென் இந்தியர் இருக்கவிட்டுவைப்பாரோ! எனக்கேட்கத் தோன்றுகிறது. தென்இந்தியப் பிராமணர் நடந்து கொள்ளும் நடத்தைகளை நோக்கிட இப்படியாக நாம் எண்ணவேண்டி வருகிறது.

**நொய்யவர் விழுமி யாரும் நூலினுள் நெறியைக் காட்டும்**
**மெய்யவர் பொய்யு மில்லார் உடலெனும் இடிஞ்சில் தன்னில்**
**நெய்யமர் திரியு மாகி நெஞ்சத்துள் விளக்கு மாகிச்**
**செய்யவர் கரிய கண்டர் திருச்செம்பொன் பள்ளி யாரே.**

## போகப்போகுது கெதியாகக் கொடு என்றார் யோகசுவாமி

நல்ல மழை பெய்து கொண்டிருந்தது ரோட்டால் எவரும் போக முடியவில்லை நானும் மழையில் நனையாமல் ஒரு கடையில் புகவேண்டி வந்தது.

யோகசுவாமியைப் பற்றி கேள்விப் பட்டிருந்தேன் அவரைக் காணவிருப்பம் இருந்தது. ஆனல் பணக்காரர் போனல்த்தான் வரவேற்பார் அல்லாது மற்றவரை ஏசிக்கலைப்பர் என்ற செய்தியை நான் பலரிடம் கேள்விப்பட்டதால் அவரை காண விரும்பியும் போய்க்காண மனம் வரவில்லை. இவர் இப்படியாகப் பணக்காரருக்கு மட்டும் சாமியென்றல் இவரைப்போய் காண்பதில் என்ன பிரயோசனம் என்றஎண்ணங்கள் பல முறை என் மனதில் உதித்ததுண்டு. இதனாலே பல முறை அவரைக்காண நினைத்த நினைபபுகள் வலுப்பெறாது விட்டன. ஆனல் மழைக்காக ஒதுங்குவதற்கு சென்ற இடம் யாழ்ப்பாணம் பெரியாஸ்ப்பதிரி வீதியில் உள்ள ஒரு தேநீர்க் கடை நான் போய் நின்ற நேரம் இன்னும் அங்கு பலரும் மழைக்காக ஒதுங்கினர். அவர்கள் மத்தியில் ஒருவயோதிபர் நரைத்ததாடியுடன் கூர்க்குடும்பி இல்லாது அள்ளிக்கட்டிய குடும்பியுடன் வெள்ளை ஆடையுடன் அரையில் அணிந்த வேட்டியை சண்டிக்கட்டுப் போல கீழ்த்தூங்கும் இரு தலைப்பையும் இடுப்பில் செருகிக் கொண்ட வண்ணம் நின்றார். அவரை நோக்கும் போது இளமையில் மூப்பென்றோ அல்லது மூப்பின் இளமையென்றோ சொல்லி வேறுகாண முடியாதபடி அவருடைய நிலை மிக மிடுக்கான உதியுடன் காணப்பட்டது. வயோதிபத்திற்குரிய தளர்ச்சி, தள்ளாடல், நடுக்கம் எதுவும் காணப்படவில்லை. என்னை அறியாமல் இவருடைய தோற்றம் என்சிந்தையை இவர் பால்ஈர்த்தது ஆதலினாலே அவர் யாராகஇருக்கலாம் என்று எண்ணிக் கொண்டு நின்றேன். அப்படியிற்கும்

மிகவும் நொய்தானவர் எங்கள் கடவுள். ஆனால் அடைதற்கரிய பெரும் சிறப்புடைய பெரியவர். பல நூல்களையும் தோற்றுவித்து அதன்மூலம் நெறியினை காண்பிக்கும் மெய்ப்பொருளானவர். பொய் என்பது இல்லாதவர். உடம்பு எனனும் அழியும் பொருளிலே நின்று நெய்யில் தோய்த்து எரியும் திரியுமாகி அதேநேரம் அத்திரி எரியும் சுடராய் (விளக்குமாகி) செவ்வண்ணம் போன்றவர். கருமையான கண்டம் உடையவர். திருச்செம்பொன் பள்ளியில் இருக்கும் எங்கள் கடவுளாய இவர்.

இறைவன் இந்த வ்ண்ணங்கள் இப்பாடல் மூலம் சொல்கின்றார். மிக நொய்தவர் என்றது அணுவிற்கணுவாயது விழுமியார் என்றது எட்டொணாத பொருள். நூல்கள் யாவும் அவரை அடையும் வழி நெறி கூறப்படுதலால் நூல்களைக் கற்று நெறியையே பின்பற்றல் பயன் என்றதால் நூலிலுள்ள நெறியைக் காட்டும் மெய்யவர் என்றார்.

மெய்யவர் என்றது கடவுள்தான் என்றும் உண்மையாக இருப்பவர். அதுவே எல்லாத் தோற்றத்திற்கும் மூலகாரணம். அது பொய்யானால் ஒரு தோற்றமும் இராது. எல்லாம் பொய்யாகும். அழிந்தேவிடும். இந்தத் தத்துவத்தை இன்று யார்க்கு விளங்கும்! பழிகாரப் பிராமணியும பாவிப் பிரசங்கிகளும் பல பொய்சொல்லி ஏமாற்றலாம். இவர்கள் வழியில் கடவுள் ஒரு போதும் இல்லை.

எமது உடம்பு அழியும் தன்மையானது, ஆனதினால் உடலெனும் இடிஞ்சில் என்றார். ஆனால் அழியும் பொருளாய உடம்பில் கடவுள் இருக்கிறார். எப்படி? உடம்பு. நெய், உணர்வு அதில் அமைந்த திரி. அத்திரியில் சுடர்விட்டு எரிபவர் கடவுள், அதை விளக்கு என்கின்றார்.

நெருப்பு எங்கும் இருக்கிறது. ஆனால் இரு கட்டைகளை தேய்த்தபின் தோன்றி தூரியில் பற்ற வைத்தால் பின்னர் நெய் இருக்கும் துணையும் விளக்கெரியும்.

ஆதலினால் உடம்பில் நெறிதான் நெய் திரி உண்மை உணர்வு. இந்த நிலையில் அழியும் உடம்பு சிவன் அருளால் அழியாமை பெறுகிறது. சிவ ஒளிக்கு உடம்பு நெய்யாகும்' இதைத் தமது அனுபவத்தால் சொல்கிறார்.

## வெள்ளியர் கரியர் செய்யர் விண்ணவ ரவர்கள் நெஞ்சுள்
## ஒள்ளியர் ஊழி யூழி உலகம தேத்த நின்ற
## பள்ளியர் நெஞ்சத் துள்ளார் பஞ்சமம் பாடி யாடும்
## தெள்ளியார் கள்ளம் தீர்ப்பார் திருச்செம்பொன் பள்ளி யாரே.

வெண்மை நிறமுடையவர். கருநிறமுடையவர்: சிவந்த நிறமுடையவர். தேவர்களது நெஞ்சத்து தோன்றிடாத உண்மைப் பொருளாக நிக்கின்றார். எத்தனையோ ஊழிக் காலமாக உலகம் பலவும் போற்றும்படி நிறை பரம் பொருளாவார். நெஞ்சத்துள்ளாக இருக்கின்றார். பஞ்சமம் என்னும் பண்ணைப் பாடி ஆடுகின்ற தெளிவுடையார் உள்ளத்து எழுகின்ற கள்ளங்களைத் தீர்ப்பார். திருச் செம் பொன் பள்ளி என்னும் தலத்தில் இருக்கும் எமது கடவுள்.

வெள்ளியர் என்றது அவரிடத்து கள்ளமும் கபடமுமில்லை. கரியர் என்றது பிதற்றுடைய தீங்குகளைதாம் ஏற்றலால் வந்தது செய்யர் என்றது செவ்வண்ணம். அதாவது எப்பொழுதும் செம்மையே விரும்புவார் என்றது தேவர்கள் நெஞ்சுத்து மிகவும் ஆராய்வுக் கெட்டாத நுண் பொருள் என்றதால் ஒள்ளியர் என்றார். உலகம் எல்லாம் அவரிலே தோன்றி அவரிலே மறைந்து அவரிலே பின்னரும் தோற்றலால் அவர் இந்த ஊழிக் காலமெல்லாம் வாழ்கின்ற அத்தனை மக்களும் கடவுள் என்று சொல்லிப் போற்றும் படிநின்ற ஒருவர் ஆவர் அதாவது ஒரு பாடசாலையே பலருக்கும் பயனுவது போன்றது என்பது போல கடவுளும எல்லார்க்கும் பொதுவானவர். நெஞ்சத்துள் நினைக்கின்ற நினைப்புக்கு நினைப்பாக உள்ளவர் என்றதால் நெஞ்சத்துள்ளார். தெளிந்து சொண்ட மக்கள் நித்தலும் அவர் நாமமே சொல்லி பாடியாடுவர். தெளிவுடையார்க்கு என்றும் கவலையில்லை. ஆதலின பஞ்சமம் பாடிஆடும் தெள்ளியார் கவலைமுதல் கபடம் யாவும் தீர்ப்பார் என்றார்.

## தந்தையுந் தாயு மாகித் தானவன் ஞான மூர்த்தி
## முந்திய தேவர் கூடி முறைமுறை இருக்குச் சொல்லி
## எந்தைநீ சரண மென்றங் கிமையவர் பரவி யேத்தச்
## சிந்தையுட் சிவம தானார் திருச்செம்பொன் பள்ளி யாரே,

யார்க்கும் தந்தையும் தாயுமாகிய தலைவன் சிவன். வேண்டுவதெல்லாம் தந்தை தாயர் தம்பிள்ளை கட்கு கொப்பது போல் தருபவன் (தானவன்) ஞானமே திருவுருவாக அமைந்தவன். எங்களுக் கெல்லாம் முன்னான தேவர்கள் கூடிநின்று முறை முறையாக இருக்கு வேத மந்திரம் சொல்லி எந்தை பெருமானே நாங்கள் உனது அபயம் என்று போற்றிப் பணிந்திட அத்தகைய பெருமக்களின் சிந்தையுள் சிவமாக நின்றருளினார் திருச் செம் பொன் பள்ளி தலத்துள் இருக்கும் எம் கடவுள்.

தோத்திரம் சொல்வார் சிந்தையில் அவராக இருக்கின்றார். அவர் இல்லாமல் நாம் இல்லை என்றதால் தந்தையும் தாயுமாகி என்றார். நாங்கள் சைவர். அவரும் சைவர். அவர தந்தை அவரது புத்திரர் நாம. அவரில்லாமல் நாம் வரவில்லை. தந்தை தாயர் பேணிய நெறிகளை நாம் பேணினால் தந்தை தாயைப் போல் நாமும் வருவோம். இதற்கு மேலாக ஏதுமுதனம் இல்லை. ஆதலின் முந்திய தேவர்கள் கூடி முறை முறை வேதம் சொல்லச் சொல்லிய அவர் சிந்தையில் அவர் கடவுளாகிறார் என்பது பொருள்.

கூட இருப்பதை விடுத்து எங்கு ஓடி என்ன காண்பது? எல்லாம் அவனேயாகும்! இந்த நினைப்பை நீளநினைந்தால் பெருவாழ்வு வந்தெய்தும்.

## ஆறுடைச் சடையர் போலும் அன்பருக் கன்பர் போலும்
## கூறுடை மெய்யர் போலும் கோளர வரையர் போலும்
## நீறுடை யழகர் போலும் நெய்தலே கமழு நீர்மைச்
## சேறுடைக் கமல வேலித் திருச்செம்பொன் பள்ளி யாரே.

கங்கை ஆறு சூடிக் கொண்டவர் போலும்: அன்பருக்கு அன்பர் போலும; பெண் ஒரு கூறாக உடைய உடம்பு கொண்டார் போலும்; கோபமுடைய பாம்பை பட்டியாக அணிந்து கொண்ட அரையுடையவர் போலும்; நீறு அணிந்த திரு மேனியின் அழகுடையவர் போலும்; நெய்தல் நிலத்திற்கு உரிய ஆம்பற் பூக்கள் வாசனைகமழும் சேற்றின் சிறப்பினால் அதில் முளைத்த தாமரை மலர்கள் வேலிபோல் அமைய விளங்குகின்ற திருச் செம் பொன் பள்ளி என்னும் தலத்தில் இக்கடவுளாவார்.

விசேடம்:—

இங்கு எம் பெருமானுடைய வண்ணங்கள் பேசியவாறு திருக் சடையின் வனப்பும் அன்பின் வனப்பும் அருளின் வனப்பும் திருவரையின் வனப்பும் திரு நீற்றின் வனப்பும் முதல் பல அழகுகள் இங்கு பேசப்பட்டன. திருச் செம் பொன் பள்ளி என்னும் எல்லை முழுவதும் குளத்திலும் தாமரை பூவிலும் காணப்படுவதாலும் அப்பகுதி கடலைச் சமீபித்த நெய்தல் நிலம் ஆதலாலும் நெய்தலே கமழும் நீர்மை சேறுடை கமல வேலி என்றார்.

## ஞாலமும் அறிய வேண்டின் நன்றென வாழ லுற்றீர்
## காலமுங் கழிய லான கள்ளத்தை ஒழிய கில்லீர்
## கோலமும் வேண்டா ஆர்வச் செற்றங்கள் குரோத நீக்கில்
## சீலமும் நோன்பு மாவார் திருச்செம்பொன் பள்ளி யாரே.

போது ஒரு பெட்டைநாய் மழையில் நனைந்தபடி அந்தக் கடைக்குள் நானும் நுழைந்தது நான் நினைத்தேன் நாய் பாவம அதுவும் ஒரு உயிர்தானே அதற்கும் இடம் கொடுக்க வேண்டும் எனநினைந்தேன். நாய் வந்த நோக்கம் உண்மையில் எனக்கு விளங்கவில்லை. நான நினைத்தது நாய் மழைக்காக வந்திருக்கலாம் என்று ஆனல் அந்த நாய் அந்த வயோதிபர் பக்கம் கடையை நோக்கிய வாறே நின்றது.

அப்போது அப்பெரியவர் கடைக்கரரை நோக்கி "இதோ வந்து நிற்குது கெதியாய்ப் போகப் போகுது அதன் பங்கைக் கொடுத்துவிடு" என்றார். அந்தக் கடைக்காரர் ஆசனத்தில் இராது எழுந்தே நின்றவர் கண்ணாடி அலுமாரியில் இருந்த பல வடையில் ஒன்றை எடுத்து நாய் முன் போட்டார். நாய் அதைக் கௌவிக் கொண்டு இறங்கித் தெருவிற்குப் போனது. போன சமயம் பின்னால் வந்துகொண்டிருந்த பஸ் வண்டி நாய் மீது மோதலும் நாய் அதில் அகப்பட்டு நெரிபட்டு இறந்தது. அப்போது நான் நினைத்தேன் மழைக்கு வந்து நின்றநாயை இந்த மனிசன் வடையை போடப் பண்ணி அதை இறக்கச்செயது விட்டதே என எண்ணினேன். போகப் போகுது கெதியாய்க் கொடு என்று சொன்ன படியால் இந்தப்பெரியவர்க்கு அந்த நாய் இன்று இறக்கப் போகிறதென்று தெரிந்திருக்க வேண்டுமென நினைத்தேன். அடுத்தகணம் தினந் தோறும் இக்கடைக்காரரிடம் இவ் வடையைப் பெற்றிருக் கலாம் ஆனல் வடை கொடுத்தாலும் வடை கொடுக்காவிட்டாலும் ஏதோ விதத்தில் அந்த நாய் பஸ்சில் அடிபட்டு இறந்துவிடும். ஆனல் அந்த வடை மேல் உள்ள ஆசைதானே நாயை அகக்கடைக்குள்ளாக்கியது எனவே அந் நாயின் வினைவினையும் காலத்தையும் முன்கூட்டியே சொல்ல வல்லவரான பெரியாராக இருக்கலாம் என எண்ணினேன். ஒருகால் இவர் தான் யோகசுவாமி என நினைத்தேன் அவ்வேளை என் மனதால் அவரை வணங்கி நின்றேன். நாயும் போய்விட்டது மழையும் ஓய்ந்துவிட்டது அப்பெரியவரும் அவ்விடத்தை விட்டு நீங்கினார். அன்றிலிருந்து நான் இனியொருக்கால் இவரை இவர் ஆச்சிரமத்தில் தரிசிக்க வேண்டும் என என்மனம் தலைப்பட்டது. ஒரு நாள் அஞ்சிய உள்ளத்துடன் அவர் ஆசியைப் பெறுவதற்காக இன்னுமொரு நண்பருடன் ஆச்சிரமம் சென்றேன் அன்று அன்புடன் எம்மை அழைத்து ஆசிவழங்கினார். இப்படியாக் இக்கதையை கல்லூரி அதிபரும் விசகடி வைத்தியருமாகியதிரு. சிற்றம்பலம் என்னிடம் தெரிவித்தார்.

## நீ கோவிலுக்குப் போக வேண்டியதில்லை

அக்காலத்தில் நான் அடிக்கடி கோவில்போய் கும்பிடுவதில்லை ஏனெனில் என்மனதில் எந்நேரமும் முருகப்பெருமானைத் திருச்செந்தூர் ஆறுமுகப்பெருமானை நினைந்துகொண்டு இருக்கும் எண்ணம் இயல்பில் எழுந்தவாறு இருக்கும். நான் எவருடனும் தேள்வையற்றபடி கதைப்பதில்லை. எந்க்கடமையையும் சரிவரச் செய்வேன். கடமைகள் எதிலும் தவறுதில்லை. அடுதது ஏதும் தவறு நேர இடங்கொடுப்பதுமில்லை. ஏதாகிலும் சங்கடங்கள் மிகவும் வேதனைப்படவரின் நான் வேறு ஒன்றும் செய்வதில்லை. அமைதியாக இருந்து முருகனை நினைந்து முருகா எனக்கேன் இந்தவில்லங்கம் விடுத்தாய் நான் ஒருவர்க்கும் ஒரு தீங்கும் செய்யவில்லையே என நினைத்துக் கொள்வேன். பின்னர் அந்த வில்லங்கங்கள் தன்பாட்டில் அகன்று போகும். இதனாலே நான் கோயிலுக்கு போய்க் கும்பிட்டு வணங்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

அடுத்து உங்களுக்குக் தானே தெரியும். இன்று கோயில் போனால் அங்கு நடைபெறும் அலங்கோலங்களைக் கணடு வேதனைப் படவேண்டும். நீங்கள் வடிவாக உங்கள் பத்திரிகையில் எழுதியிருக்கிறிபள் (சிரிப்பு— நானும் கூடச்சிரித்தேன்.) இந்த நிலையில் நான் கோயில் கும்பிடச்செல்வது மிகக் குறைவு.

ஆனால் எனது மனைவி ஒழுங்காக கோயில் சென்று வழிபடுபவர். அர்ச்சனை முதல் பல சிறப்புக்களும் நடைபெறும். எனது பிள்ளைகளும் போவார்கள் ஆனல் எனது மனைவிக்கு ஒரு கவலை நான் ஏன் கோவிலுக்கு போவதல்லை? இந்த மனக்குறை பாட்டால் என்னிடம் சிலவேளை நீங்கள் ஏன் கோவிலுசகு போவதில்லை. ஒருக்கால் இன்று நல்ல நள் இன்றைக்காவது போய்க் கும்பிட்டு வாருங்சள் எனச் சொல்லிப் பார்த்தா! நான் அதனைப் பெருபடுத்தவிலலை.

இப்படியான நிலையில் என் மனைவிக்கு நான் போகாததையிட்டு பெரும் கவலையாக இருநதது. இக்கவலையை தன் மனதல் வைத்து வேதனைப்பட்டுக்கொண்டிருந்தார். இபபடியிருக்கும் வேளையில் ஒருநள் நானும் என் மனைவியுல் எமது கார்ல் யாழ்ப்பாணம், சென்றோம். யாழ்ப்பாணத்திவ் காங்கேசன்துறை வழியாக சிவன் கோவிலுக்கு அருகாமையில் வரும்நேரம் யோகசுவாமிகள் அவ்

இந்த பூமியில் உற்ற பிறவியின் பயனை அறியவேண்டுமாயின் அல்லது பூமியில் உள்ளோர் உம்மைக் கணிப்புடையவராக மதித்தலே பேறெனக் கருதி அப்படி உலகத்தவர் உம்மை ஒரு மெய்ப் பொருளாக அறிய வேண்டுமெனின் அதற்காக நன்றென வாழ்ந்து கொண்டிருப்பீர் உமது காலங்களும் கழிந்து போகின்றன. உண்மைப் பொருளை அறிய விரும்பாதிருக்கின்றீர். கள்ளத்தனத்தை நீங்கள் இன்னும் ஒழிக்கிறீர் இல்லை. நீங்கள் ஏதும் கோலங்கள் செய்யவேண்டாம். உண்மைப் பொருளை அறியவேண்டினல் எதும் ஒரு பற்றை (ஆர்வம்) யார்மீது பகை (செற்றம்) பொருமை (குரோதம்) இவைகளை நீக்கிவிட்டால் அதுவே விரதம் சீலம் ஆனதன்மையாக இருப்பர் இத் திருச்செம்பொன் பள்ளி என்னும் திருத்தலத்தில் இருக்கும் கடவுள்.

இப்பாடலிலே கடவுள் சீலத்தின் வடிவாக இருக்கிறார் என்பது பேசப்படுகிறது. பூமி எப்படித் தோன்றியது எப்படி இயங்குகிறது இதன் முடிவு என்ன? இதன் உண்மை என்ன? இதன் இரகசியம் என்ன? என அறிவதற்காக நன்றென்று வாழவுற்றீர். அந்த வாழ்வென்னும் ஆராச்சியில் காலங்கள் கழிந்து போகின்றன. இதனாலே உண்மைப் பொருளை அறிவதற்கு உங்கள் கள்ளத்தனம் மறைத்துக் கொண்டிருக்கிறது கள்ளம் என்பது இங்கு தெளிவதற்கு வழியிருந்தும் தெளியாது வேறு வகையில் ஈடுபடுவது. ஆனதினல் கள்ளத்தை ஒழிய கிலீர் என்றார்.

உண்மைப் பொருளறியாது துறவி என்று சொல்லிக் கொள்ளும் எத்தனையோ சாமிகள் உண்மைப் பொருளை தாமறிய வழியிருந்தும் அதைவிடுத்து காவியுடுத்து சடையும் வைத்து சிலர் மொட்டையும் அடித்து இன்னும் சிலர் கலர்ச் சால்வையும் அணிந்து இப்படி பல கோலங்கள் செய்து மேடையில் தோன்றியது தான் மிச்சமன்றி அவர்களில் உண்மைப் பொருளை அறிந்தார் யாருமில்லை. அவர்கள் மண்டபம் கட்டி மாநாடு கூட்டி கண்ட மிச்சமெலாம் காலமெலாம் வீணபோக்கியதே.

இதனாலே கள்ளத்தை ஒழிய கில்லீர் என்றார். இந்தச் சாமிகள் பிரசங்கம், பேச்சால் கெட்டுப் போனதே அன்றி வேறு பயன் இல்லை. மஹராச் யோகி மஹராச் என்றும் இராமகிருஷ்ணர் விவேகாநந்தர் என்றும் பல பெரியார்கள் வந்தனர். இவர்களைப் பின்பற்றிய பலர் காவிஉடுத்து தாழ் சடைவைத்து மிசநெறி நடத்தி இப்படி எத்தனையோ கோலங்கள் செய்தனர் இதில் எல்லாம் பயன் ஒன்றும் இல்லாது போய் விட்டது இவை எல்லாம் பயனில்லாது போகும் என்றதால் கோலமும் செய்யவேண்டாம் என்றார். ஆனதினலே இந்தக்கோலம் செய்வோரை நோக்கிக் கோலம் செய்தும் களளம் ஒழியவில்லை. ஆனதினலே எந்தக் கோலத்தையும் விடுத்து அவா வெகுளி, பொறாமை இவை மூன்றையும் நீக்கி விட்டால் இதுவே சீலமாகி இதுவே நோன்பாகி சிவன் வந்து தோன்றுவான் என்பதை சீலமும் நோன்புமாவார் திருச்செம்பொன் பள்ளியாரே என்கின்றார்.

இவை இல்லறம், துறவறம் ஆன இருவகை அறத்தோர்க்கும் உண்மையை இயம்பியவாறு.

## புரிகாலே நேசஞ் செய்ய இருந்தபுண் டரீகத் தாரும்
## எரிகாலே மூன்று மாகி இமையவர் தொழநின் றாரும்
## தெரிகாலே மூன்று சந்தி தியானித்து வணங்க நின்று
## திரிகாலங் கண்ட எந்தை திருச்செம்பொன் பள்ளி யாரே.

தம்மால் இயன்றவரை காலந்தோறும் வழிபாடுபுரிந்து அன்பு செய்ய அவ்வாறான அன்பர்க்கு அகத்தாமரையில் இருந்த ஒளியான பிரமமும், ஆகவனீயம், காருகபத்தியம் தக்ஷிணக்கினியம் என்னும் மூன்று அக்கினிகளாகி தேவர்கள் வழிபட நின்றாரும் மூன்றுகாலங்களும் உணர்ந்து காலை, உச்சிவேளை, மாலை என்னும் மூன்று காலங்களிலும் தியானித்து அடியார் வணங்கநின்று மூன்று காலங்களும் தன்னிடத்து தோன்றும்படி கண்டு கொண்டிருக்கும் எந்தை பெருமான் இத் திருச்செம்பொன் பள்ளியிலிருக்கும் கடவுளாவார்.

அன்பர்களுடைய அகத்தாமரை மீது இருக்கும் தெய்வவிளக்கொளியே சிவன் ஆவார். எல்லாச்சுட்டினையும் (நோக்கம்) நீக்கிவிட்டு சாந்தமாய் இருப்பார்க்கு சோதிமயமாக அகத் தாமரையில் கடவுள் தோன்றும். தேவர்கள் மூவகை அக்கினிகளாக சிவனை வழிபடுவார்கள். காலை, மத்தியானம், மாலை மூன்று காலங்களையும் உணர்ந்து சலம், பூ, தூபம், தீபம் இவற்றுடன் வணங்கித்திய னிக்க அவன் நிற்பது புலப்படும், அவனிடத்தில் வருங்காலம், நிகழ்காலம், செல்காலம் ஆனமூன்று காலங்களும் தோன்றப்படும். ஆனதினலே தியானித்து வணங்கநின்ற திரிகாலம் கண்ட எந்தை என்றார்.

## காருடைக் கொன்றை மாலை கதிர்மதி அரவி னேடும்
## நீருடைச் சடையுள் வைத்த நீதியார் நீதி யுள்ளார்
## பாரொடு விண்ணும் மண்ணும் பதினெட்டுக் கணங்கள் ஏந்தச்
## சீரொடு பாட லானார் திருச்செம்பொன் பள்ளியாரே.

கருமை பொருந்திய மேகங்கள் வந்து தங்கும்படி உயர்ந்தோங்கிய கொன்றை மரத்தின் மலர் மாலையும்; ஒளி வீசும் இளம் பிறையும்; நாகபாம்புடன் கங்கை நதி தங்கிய சடையுள்ளாக இவற்றை வைத்த நீதியை உடையவர். என்றுமே நீதிஉள்ளவர். இப்பூமியும் தொடர்பான வானுலகும் மண்ணுலகும பிறவிடமெங்கும் வாழும் பதினெண் வகையான சிவகணங்கள் போற்ற அவரது சீர் நிரம்பிய பாடல் ஆகினர் திருச்செம் பொன் பள்ளி என்னும் தலத்தில் இருக்கும் இக்கடவுள்.

விசேடம்:—

மலர்களுள் கொன்றை மலர் மாலையையும் ஒளிப் பொருட்களில் இளம் பிறையையும் ஊர்வவற்றில் பாம்பினையும் நீர் தங்கிய சடையுள் வைத்தது நீதி.

கொன்றை மலரின் சிறப்பு பற்றி முன்னமும் குறிப்பிட்டோம் அது பூத்திருக்கும் போது மரம் முழுதும் இலை மறையப் பூக்கும். அதோடு அந்த மரம் உயரவழர்வதும் அதன் மீது மேகங்கள் படியும் படியானதும அதன் மீதுள்ள ஈரலிப்பைக் குறித்தது. ஆனதனல் உள்ள மலர்ச்சி அன்பினை சிவன் விரும்புவான் என்பது ஒரு நீதி. உள்ள மலர்ச்சியை கெடுப்பன அழுக்காறு அவா வெகுளி. இம் மூன்றும் இல்லதவர்க்கு என்றுமே உள்ளம் பூரணமாய் இருக்கும் என்பது உட்பொருளாக கொன்றை மலர் மாலை அணியும் நீதியார் என்றார்.

இளம் பிறைச் சந்திரனனது தக்கனுடைய சாபத்தினலே தேய்ந்து போகும் அது ஒரு நிலையில் சிவனை வந்தடைய அதை தன் சடைமீது அணிந்து கொண்டார். அவர்பால் சேர்ந்தவுடன் பின்னர் தேய்வதே இல்லை. இதன் தாற்பரியம் உலகில் சுகதுக்கங்களால் துயரபபடுகின்ற உயிர் சுகத்தை அனுபவிக்கும் போது தெய்வத்தை எண்ணது. ஆனல் துக்கத்தை அனுபவிக்கும் போது அதைச்சகிக்க மாட்டாது கடவுளை நாடுகிறது. அந்நிலையில்த் தான் துக்கத்தின் மிகுதியால் உயிர்கள் முடிவாகும் காலத்து சிவனை அடையும் நேரத்தில் அவ் உயிரின் வளர்ச்சியின் சிறு பங்கேனும் இருக்கும் போது சிவனை அடைந்து கொண்டால் அத்துக்கம் பின்னர் சுகமாக மாறி பின்னர் வளர்வதும் ஆக என்றுமே நித்தியபேறான இன்பம் சிவத்தோடு சார்ந்ததைக் குறிக்க இளம் பிறை சூடிய நீதி பேசப்பட்டது.

நாகங்கள் நஞ்சுடையன, பொல்லதன எனினும் அப்பொல்லாதபாம்புகள் தன்னிடம் ஒன்றும் செய்யாது என்பதைக் குறிக்க நாகம் அணிந்து கொண்டது ஒரு நீதியானது. இளம பிறைக்கும் பாமபுக்கும் நெடுநாளும் பகை. எந்தப்பகையையும் சிவத்திடத்துப் போனல் அது மறையும், அல்லது மறைக்கப்படும் என்பது குறிப்பாகும்.

கங்கை உலகை அழிக்கும்படி எழுந்த நீர்ப் பெருக்கம் உலகை அழிக்கும் அந்த ஆற்றல் கெட்டு சிவத்திடம் போய்த்தங்கிக் கொண்டது. ஆனதனலே கங்கையை சடையில் வைத்தது நீதயாகும். இந்த நீதிகள் எல்லாம் எம்பிரானின் கருணைப்பெருக்கத்தை காணபிப்பன.

நீதியார் நீதியுள்ளார் என்று விசேடித்து இங்கு கூறவதும் இந்த நீதயில் உணர்ந்தார்க்கும் உணர ஒன்ணாத நீதியாக அமைந்தது என்றதும்.

நாம் வாழும் இப்பூமியுடன் தொடர்பாக 14 உலகங்கள் உண்டு. பூமி நடுவராக கீழ் ஏழுமேல் ஏழுஆக 14 உலகம் உண்டு. இப்பதினலு உலகங்களில் கணங்கள் வாழ்கின்றன. இந்த 14 உலகத்துக்கணங்களும் 18 வகையாக உள்ளன. இவர்கள்தத்தம் இயல்பில் ஒழுக்கம் மிகுந்தவர்கள். அதோடு ஒளியை வேதநெறியால் தோற்றுவிப்பவர் எனவே இந்த வேதநெறியும், சீலமும், தோத்திரமும் சிவனே என்கிறார்.

வீதியால் போய்க்கொண்டிருந்தார். உடனே நான் காரை நிறுத்தி சுவாமியையென்று வணங்கினேன். அவர் என்னைக்கண்டதும் எனது கையைப்பற்றி பிடித்துக்கொண்டு சேமம் விசாரித்தார். மனைவியும் பக்கத்தில் நின்றார். அப்பொழுது என்னை நோக்கி நீ கோயிலுக்குப் போகத்தேவையிற்லை. உனக்கொரு குறையுமில்லை என்றார். இது என் மனைவிக்கு பல காலமாக மனதில் கொண்ட துயரை மாற்றிய மருந்தாக அமைந்தது. பின்னர் பல கதையும் கதைத்த பின் வழியனுப்பினர். அன்றிலிருந் என்மனைவி என்னை கோயிலுக்குப் போகச் சொல்லிக் கேட்பதில்லை. இவ்வாறு இக்கதையை ஆனைக்கோட்டையைச் சேர்ந்த கரு சுப்பிரமணியம் என்பவர் தெரிவித்துக் கொண்டார்.

## தாளத்திற்கு அற்புத விளக்கம் கொடுத்தார் யோகசுவாமி

எனக்கு அப்போது பன்னிஇரண்டு வயதிருக்கும் என் தந்தை தவில் வாசிப்பவர். நல்லூர் மாணிக்கம் அவர்களின் தவப்புதல்வர் பசுபதி அண்ணர் எங்கள் தந்தையார்க்கு நாதஸ்வரம் வாசிப்பவர். நான் அப்போது தாளம் போடும் பையன். நாதஸ்வரம் வாசிக்க பழகிக் கொண்டிருந்தேன். இந்நிலையில் நாங்கள் கொழும்புத்துறைப் பிள்ளையார் கோயிலுக்கு நவராத்திரி பூசைக்காக சேவகம் செய்ய சென்று அங்கு தங்கியிருந்தோம் அப்பொழுது அக்கோயிலின் உள்ளே நான் நாதஸ்வரம் வாசிப்பபன். வெளி வீதயில அண்ணர் வாசிப்பார். பசுபதி அண்ணரைத் தெரியுந்தானே என்றார் என்னை நோக்கி. நான் ஆமாம் நன்கு தெரியும என்றேன். அன்று நாதஸ்வரக் கலை தெய்வீகக் கலையாக இருந்தது. இன்று அது சினிமாக் கலையாக மாறிவிட்டது. இனறு சினிமாப் பாட்டு ஊதுபவனை விதது வான் என்றேன். அவரும் சிரித்தார். நானும் சிரித்தேன. இந்நிலையிலே மீண்டும் அவர் தொடர்ந்து சொன்னர். ஆமாம் இப்படியாக உள்வீதியில் மட்டும நன் வாசிக்கும் போது ஒரு தினம் என் தந்தையார எனக்கு ஒரு வர்ணம் சொல்லிக் கொடுத்தார். அந்த வர்ணத்தை என்னல் சரிவரப் பிடித்து வாசிக்கமுடியவில்லை. உடனே என்க்கு நல்ல அடி நடந்தது அடியை என்னல் தாங்க முடியவில்லை இந்த நிலையில் பசுபதி அண்ணர் அங்கு வந்தார். இதைக் கண்டுவிட்டு எனது தந்தையை நோக்கி என்ன இவனை வேலை செய்கிறாய்? பையனை இப்படியும் அடிப்பதா? என்று சொல்லித் தடுத்தார். மேலெல்லாம் காயம். அதோடு அழுத கண்ணீர் மேலெல்லாம் வடிந்து போய் இருக்குது. இந்த நிலையில் என்னைப்பார்த்து வாடா தம்பி என்று கிணற்றடிப் பக்கமாக அழைத்துச் சென்று கால் முகம் கழுவி பின்னர் என்னை நோக்கி வாடா தம்பி யோகசுவாமியிடம் போவோம் என்றார். நானும் சரியென்று பின் தொடர்து சென்றேன. நாங்கள் போன நேரம் சுவாமியினுடைய ஆச்சிரமம் வாசலில் கனகார்கள் வற்து நின்றன. நாங்கள் படலைக்கு வெளியே நின்றசமயம யாருக்கோ தூடன வார்த்தைகளால் பேச்சுநடக்கிறது. பசுபதி அண்ணர் சொன்னர் இப்ப நிலமை சரியில்லை. உள்ளுக்குப் போகக் கூடாது. இன்றைக்குப் போகவேண்டாம். என்னுமொரு நாளைக்குப் போவோம் என்றார். இவ்வளவிற்கும் சுவாமி எங்களைக் காணவில்லை. நாங்கள் திரும்ப உள்ளிருந்தபடி ''பசுபதி போகாதே வா'' என்று சுவாமி கூறினர். பின்னர் படலையைத் திறந்து கொண்டு உள்ளிற்கு போனேம். ஆச்சிரமம் நிறைய பல பெரியார்கள் இருந்தார்கள். சுவாமியின் திருமுன்னல பலகாரவகைகள், அப்பிள்ப் பழங்கள், முந்தரிகைப் பழங்கள நிறைய இருந்தன. பசுபதி அண்ணர் முன்னல் செல்ல, நான் அவர்பின்னல் சென்று சுவாமியை வணங்கிவிட்டுஓரிடத்தில் இருந்தோம் பசுபதி அண்ணர் என்னை அறிமுகம் செய்தார். சுவாமி என்னை நோக்கி நீ என்ன செய்கிறாய் என்று கேட்டார். நான் தாளம் போடுவேன் என்றேன். உனக்கு எத்தனை தாளம் தெரியும் என்றார். மூன்று தாளம் தெரியும் என்றேன். முதல்தாளம் என்ன என்றார். ஆதி என்றேன். எத்தனை அட்சரம் எனக் கேட்டார். எட்டு அட்சரம் என்றேன். இப்பொழுது போடு என்றார். நான் தக்க தத்த என்று தொடங்கி போட்டுக் காண்பித்தேன். உடனே சுவாமி சரி என்று விட்டு இது ஆதி என்று கூறி அங்கிருந்தாரை நோக்கி தாளததிற்கு விளக்கம் கொடுத்தார். இத்தான் தரு கூத்தன் அடிப்படையில ஆதியாக உள்ளது என்று இந்த ஆதியின் எட்டு அட்சரங்களின சூக்கும விளக்கத்தினை 15 நிமிடங்களுக்கு மேலாகும் வரை எடுத்துவிளக்கிக் காட்டினர்.

அதன் பின்னுக தனது முன்னுபாகக் காணிக்கையாக வைக்கப்பட்டிருந்த ஒரு பாசலை எடுக்கச் சொன்னர். அதை அவிழ்க்கச் சொன்னர். அவிழ்த்துப் பார்க்க நெய்யில சுட்ட தேன் குழலாக இருந்தது. அதை முழுவதையும் சாப்பிடச் சொ

## ஓவாத மறைவல் லானும் ஓதநீர் வண்ணன் காணு
## மூவாத பிறப்பி லாரும் முனிகளா னூர்கள் ஏத்தும்
## பூவான மூன்றும் முந்நூற் றறுபது மாகும் எந்தை
## தேவாதி தேவ ரென்றுந் திருச்செம்பொன் பள்ளி யாரே.

எக்காலமுமே ஓய்விலாது வேதம் ஓதும் வல்லமையில் வல்லவனான பிரமனும் பாற்கடல் மீது பிரியாது பள்ளி கொள்கின்ற திருமாலும்; காணமுடியாத மூப்பும் அடையாத பிறப்புமில்லாதவரும் முனிவர்கள் ஆனூர்கள் போற்றும் பூக்களான மூன்றும் முன்னூற்றறுபதும் என்னும் நாட்களும் ஆகிய எந்தை தேவாதிதேவன் என்று போற்றப் படுகின்ற எம்பிரான் சிவனே திருச்செம் பொன் பள்ளி என்னும் தலத்தில் இருக்கும் கடவுளாகும்.

விசேடம்:—

பிரமன் ஒரு காலமும் வேதம் ஓதுவதற்கு தவறுவதில்லை. ஓதுவதொழியேல் என்பது முதியோர் வாக்கு. வேதம் ஓதுதல் பெருமையைத் தருவது, சிறப்பைத் தருவது. பிரமனுடைய வேதம் ஓதுதலே அவரை அப்பிரமபதத்தில் நீடிக்க வைத்திருப்பது. ஆகையால் தன்மையினாலே ஓவாத மறை வல்லான் என்றார். வேதங்களில் வல்லமை ஒருவரிடத்து தெய்வீகத்தை தானாக வளர்த்துவிடும்.

திருமால் பாற்கடலில் பள்ளி கொள்பவர் அடுத்து கடலின் கருமை போன்ற நீல நிறமுடையவர் ஆகையினாலே ஓதநீர் வண்ணன் என்றார், இருவரும் தேடினார்கள் தேடிக்காண முடியவில்லை. அவர்கள் எப்படிக் காணமுடியும்? பிறப்பு மூப்பு என்னும் இருமைக்கும் உட்பட்டவரை நாம் தேடிக்காணலாம். இதற்கு அப்பாற்பட்டவரை எவ்வாறு தேடிக்காண்பது. ஆனதினால் அவர் காணு மூவாத பிறப்பிலார் என்றார். பிறப்பு இருந்தால் மூப்பு வரும். ஆன்மா பிறப்பதும் இல்லை. இறப்பதும் இல்லை. அது தன்னுள் தானாக இருப்பது. இப்பாலே இதனையே தன்னுள் தன்னை உணர்ந்து கொண்டு வேறு சிந்தனை இன்றி முனிவர்கள் அப்பொருளையே மூலத்தாமரை நெஞ்சத்தாமரை உச்சித் தாமரை ஆகிய இவ் இடங்களில் கண்டு தொழுதபடி இருப்பார்கள். இதனுடைய விளைவுகளான தத்துவங்கள் காலங்கள் முன்னூற்றறுபதும் ஆகும். இவை எல்லாம் சிவம், ஆகையினாலே இவ்வகையான எந்தை பெருமான் எல்லாக் கடவுளுக்கும் தேவன் இவரே திருச்செம் பொன் பள்ளியில் இருக்கின்றான் என்றார்.

## அங்கங்க ளாறு நான்கும் அந்தணர்க் கருளிச் செய்து
## சங்கங்கள் பாட ஆடுஞ் சங்கரன் மலை எடுத்தான்
## அங்கங்கள் உதிர்ந்து சோர அலறிட அடர்த்து நின்றும்
## செங்கண்வெள் ளேற தேறுந் திருச்செம்பொன் பள்ளி யாரே

நான்கு வேதங்களும் ஆறு அங்கங்களும் உணரும்படியாக அறம தலையான ஒழுக்கத்தில் நின்ற நான்கு அந்தணர்கள் சனகர் சனற்குமாரர் சனந்தனர் சனாதனர்க்கு அருள்புரிந்து தமது திருப்பாதத்து சிலம்பு ஓசைபடப் பாடும்படி ஆடுகின்ற சகலருக்கும் சுகம் செய்யும் ஒருவன் எமபிரான் சிவன். திருக்கைலாயமலையைத் தூக்கி எடுத்த இராவணனது அங்கங்கள் உதிர்ந்து சோர்வடைந்து அலறிட திருப்பாத விரலால் ஊன்றிநின்றும் இன்னம் சிவந்த கண்ணுடைய வெள்ளை இடபத்தின் மேலாக ஏறியருளும பெருமான இத்திருச்செம்பொன்பள்ளி என்னும் தலத்தில் உறைபவன்.

வேதங்கள் நான்கும் ஆறு அங்கமும் கல்லால விருட்சத்தின் கீழாக அமர்ந்து ஆருந்து ஓதப்பட்டது. இதனைப் பெற்றவர்கள் அந்தணர்கள். இவர்கள் அறத்திலைத் தலையான ஒழுக்கமாகக் கொண்டவர். இதனையே அந்தணர் அறவோர் எனப்படுவர் எனப் பெரியோர் கூறுவர்,

சிவனது வேதங்கள் நான்கும் கேட்கப்படுவன. இன்றும நாளையும இன்னமும ஊழி ஊழி காலமெல்லாம் கேட்கப்படுவன ஏனையோரால் கேட்கப்படாத நிலையில் உள்ளதால் அதை மறை என்று சொல்லுவார்கள். அது மறைந்துபோயிருக்கிறது. முறைப்படி தேடினால் அது கேட்கப்படும். இதனைக் கேளாது கேட்டல் என்று பெரியோர்கள் சொல்வார்கள், உலகநிலையில் உற்றுக் கேட்பது போல் அல்லாது மெய்மறந்தநிலையில் கேட்கப்படுவதால் இதனைக் கேளாது கேட்டல் எனப்படும், இதனை ஓதாது உணர்தல் என்றும் சொல்லலாம்.

எங்களது உடம்பு கோயில். அதில் கடவுள் இருக்கிறார். அக்கடவுள் தானாக வேதம் ஓதியபடி இருக்கிறார். அந்த ஓசைத் தொனிகளைக் காதோடு கேட்கப்படுவனவல்ல. கருத்தோடு கேட்கப்படுவன. இந்த நிலையில் அதைக் கேட்பதற்குரிய தகுதி அறம்நின்றோர்க்கு உரியதாததில் அவர்களை அந்தணர் என்றார். அறம் நின்றோர் அனைவரும் அந்தணரே. சாதி என்றதல்ல. மனித குலத்தில் சாதி என்பது அறத்தின் ஒழுக்கத்தால் தலைப்பட்டதே அன்றிக் குலத்தால் வந்ததல்ல.

அறமில்லாதார் எவரும் அந்தணர் ஆகார். அவரால் திருவருளுக்குரிய செயலைப் பெற்றுக்கொள்ளவும் முடியாது, இன்று எமது நாட்டிலிருக்கும் பிராமணர்களில் 99 சதவிகிதமானவரும் அறமில்லாதவர் ஆதலின் இறைக்கொண்டு எந்தக் கோவிலிலும் பூசை செய்விப்பது பெருந்தவறாகும்' இவர் பூசைசெய்வதைப் பார்ப்பது அல்லது வணங்குவது பெரும் தோசமாகும்.

யோகசுவாமி அடிக்கடி சொல்பவர் எங்களுடைய வேதங்கள் சிவத்திடம் கேட்கப்பட்டுப் பின் உலகிற்குச் சொல்லப்பட்டன. ஏனைய பேதமைச் சமயங்களின் நூல்போல எமது சைவ வேத அங்கங்கள் இல்லை என்று சொல்பவர். யோகசுவாமிகளுடைய வாழ்வு முற்றிலும் அறத்துக்கு இலக்காக அமைந்தது. எனவே வேத அங்கங்கள் அந்தணர்க்கு அருளிச் செய்தார்என்று இப்பதிகத்துக் கூறினர்.

## கோவில்களில் ஒலிபெருக்கி பாவிப்பது மனநோயாளர் செயலாகிவிட்டதுபோல் தெரிகிறது

எம் நாட்டிலே ஆலயங்களிலே ஒலிபெருக்கி பாவித்தலை முற்றாக நிறுத்தும்படி சந்திரதீபத்தில் கருத்து தெரிவிக்க முன் யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள தருமம் விளங்கிய பெரியோர்களை ஒலிபெருக்கி பாவனையைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் யாதென வினவினோம்? அவர் அனைவரும் இந்த ஒலிபெருக்கிப் பாவனை பைத்தியகாரச் செயல். இதை ஒரு பெரிய பொருளாக மக்கள் இன்று கருதுக்கொள்கிறார்கள். சாமிக்கு விளக்கெரிக்காமல் விட்டாலும் ஒலிபெருக்கி இருந்து விட்டால் எல்லாம சரி என்ற அளவுக்கு மக்கள் வந்துவிட்டார்கள். ஆரவாரத்தையே மக்கள் விரும்புனரே ஒளிய அமைதியை விரும்புகின்றாரில்லை. ''அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை ஆர்இருள் உய்க்கும்'' என்ற திருக்குறளைக்கூட மறந்து படித்த வித்துவான்களுமே பல கோயில்களில் பகட்டான நிலையைவிரும்பி இந்தமாதிரி கோயிலில் ஒலிபெருக்கியைப் பாவிக்கிறார்கள் எனக் கருத்துத் தெரிவித்தார்கள்.

ஆலயமென்பது ஆ—ஆன்மா, லயம்—ஒடுக்கம் என்றதாகும். ஆதலினாலே ஆலயம் என்றதன் கருத்து ஆன்மா ஒடுக்கத்தைச் சேருமிடம் இதனைப் பெரியோர்கள் ஆமை ஐந்து அடக்கல் என்பர். ஆமையானது ஓர் அரவம் கண்டால் உடனே தன்னுடைய தலையையும் 4 கால்களையும் உள் முத்து செயலற்றுக் கிடக்கிறது. ஆகையினாலே ஆலயம் செல்வோர் அங்கு சென்றால் மமதைகள் அடங்கி மனோலயம் ஆதல் வேண்டும. ஆன்மா லயப்படுவதற்கு முதல் மனம் லயப்பட வேண்டும். மனம் லயப்படாமல் ஆன்மா எவ்வாறு லயப்படும். அது கைகூடாது. ஆதலினாலே ஆலயம் என்ற அந்தச் சொல்லுக்கு அமைய ஒரு இடம் இல்லாத பொழுது அதனை நாம் ஆலயம என்று எவ்வாறு சொல்வது. அதை வேறு பெயரிட்டுச் சொல்ல வேண்டி வரும். ''ஆலயம் தொழுவது சாலவும் நன்று'' என்று ஔவைப் பிராட்டி சொன்னதின கருத்து ஆலயத்தின் முழுநலம் பற்றியே ஆகும்.

இதை உண்மையில் விளங்கிக் கொள்வோமானால் ஆன்மா லயப்படும் இடமாக ஆலயம் அமையாது! அந்த ஆன்மா அங்கரப்பட்டு ஐயோ! என பதைக்கும்படி ஒலிபெருக்கியில் ஆரவாரம் செய்து கூக்குரல் இடுவது எவ்வளவு பாதகமான செயல்! இதை மனக் கட்டுப்பாடுடையார் அல்லது மன நிறைவு உடையோர் எவரும் செய்வாரோ? அன்றி செய்யத் தூண்டுவாரோ? அல்லது தாமும் இச் செயலில் பங்கு கொள்வாரோ?

ஆலயம் அடக்கத்துக்குரிய இடம். அமரரது நிலை பெறற்குரிய இடம். அது அல்லாமல் அடங்காமையின் செயல்களைப் புரிந்து நீங்காத கொடிய இருளில் சேர்வதற்குரிய இடமல்ல இக்கருத்தை நன்றாக மனதில் பதிய வைத்துக் கொள்ளுங்கள்.

ன்னார். எங்கள் கையெல்லாம் நெய்யும் தேனும் வடிந்தது. சாப்பிட்டு முடிந்ததும் அடுத்த தாளம் என்ன? எனக்கேட்டார். நான் திரிபுடையென்றேன். அதற்கு எத்தனை அட்சரம் என்றார். மூன்று என்றேன் போட்டுக்காட்டு என்றார். போட்டுக்காண்பித்தேன். பின்னர் அதற்கு அங்கிருந்தார்க்கு விளக்கம் நடத்தது. பின்னர் அங்கிருந்த இன்னுமொரு பாசலை எடுக்கச் சொன்னார். விரிக்கச் சொன்னார் விரித்தோம். தனித்த ஒரு பெரிய மோதகம் இருந்தது. அந்தமோதகத்தை சாப்பிடும் படி சொன்னார். சாப்பிட்டோம். எங்களுக்கு வயிறு நிரம்பிவிட்டது. அதன் பின்னர் எனை நோக்கி அடுத்த தாளம் என்ன என்றார். ஏகம் என்றேன். எத்தனை அட்சரம் என்றார் ஒரு அட்சரம் என்றேன் போட்டுக் காட்டு என்றார். நான் போட்டுக் காண்பித்தேன் பின்னர் இது தான் ஏகம் என்று சுவாமி அங்குள்ளார்க்கு சொன்னார். இதற்குரிய விளக்கத்தையும் மிகத் திவ்வியமாக எடுத்துக் கூறினார். இவ்வளவும் சுவாமி இந்தச்சங்கீதக் கலையைப் கற்றுணர்ந்தவரில் தனக்கு நிகர் இல்லாதவர் போலவே எடுத்தியம்பினார். இவ்வளவும் இவருக்கு என்னென்று தெரியும்! என்று எங்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஏகதாளத்திற்கு வியாக்கியானம கூறி முடிந்ததும் தமக்கு முன்பிருந்த ஒரு பெரிய மோதகம்பழத்தை தமது திருக்கையால எடுத்து என்னிடம் கொடுத்து இதைக் கொண்டு சென்று சாப்பிடு என்றார். நாம் இருவரும் எழுந்து சுவாமியை வணங்கி அவர் ஆசியைப்பெற்றுக் கொண்டு அவரின் உத்தரவின் பேரில் மீண்டுகொண்டோம். இவ்வாறு இக்கதையை இணுவிலைச் சேர்ந்த நாதஸ்வர வித்துவான் திரு கோவிந்தசாமி என்பவர் மிகப்பக்திமையாக என்னிடம் தெரிவித்துக் கொண்டார்.

## யோகசுவாமி அருளால் நீங்கிய ஏவறைவருத்தம்

எனக்கு அக்காலத்தில் ஏதும் உணவு உண்டால் நெடுக ஏவறை விட்டபடி இருப்பேன். அதுவன்றி விக்கல்போலவும் வரும். எனது கணவர் இந் நோய்க்கு மருந்துசெய்தார். அது தீரவில்லை. இந்த நெடுக ஏவறைவிட்டுக் கொண்டிருப்பதால் எனக்கும் அரியண்டம், பிறர்க்கும் அது அரியண்டமாக இருந்தது.

இந்த மனுசிக்கு நெடுக ஏவறைதான் என்று பலரும சொல்வது எனக்கு மிகவும் வேதனையாக இருக்கும். இப்படியிருக்க ஒருநாள் யோகசுவாமி கந்தவனக்கடவைக்கு வந்தபோது அவரது அன்பரான என் கணவரும் நானும் அவரிடம் சென்றிருந்தோம். சுவாமியைத் தரிசித்து அவருடன் கலந்துரையாடிக்கொண்டிருக்கும்போது நான் அடிக்கடி ஏவறைவிட்டுக்கொண்டிருந்தேன. இதனை அவதானித்த சுவாமி இது என்ன என்று கேட்டார். எனக்கு ஏவறை வந்தால் மாறுவதில்லை. எவ்வளவோ மருந்து உட்கொண்டும் மாறவில்லை என்றேன்.

சுவாமி சிறிது நேரம் பேசாதிருந்துவிட்டுப் பின் என்னை நோக்கி நாளைகாலை வரும்போது பிட்டும் அவித்துக்கொண்டு இரசமும் வைத்துவா என்றார். அதன்படியே அடுத்தநாட்காலை பிட்டும் அவித்து இரசமும்வைத்து ஆயத்தமானேன். சுவாமியும தொண்டர்களும் வந்து எமது தோட்டத்தில் சிறிது நேரம் வேலைசெய்தனர். செய்துவிட்டு மதிய போசனத்துக்கு வந்தார்கள். நாம் பிட்டையும இரசத்தையும் பரிமாறினோம். சுவாமி உண்டதும் என்னைப்போல் ஏவறை அவருக்கும் வந்தது. அது தீரவில்லை. படுக்கப்போகிறேன் பாயெடுத்துக் கொண்டுவா என்றார். கொண்டோடிவந்து போட்டோம். சுவாமி அதிற் படுத்து அனுங்கி அனுங்கி அப்படியும் இப்படியும் புரண்டது. மரண அவஸ்தைப்படுபவர்போல் காணப்பட்டார். சுவாமிக்கு என்ன செய்யப்போகுதோ என்று நாமெல்லோரும் ஏங்கித் தலையில் கைவைத்து முருகா என்று குழறினோம். சிறிதுநேரத்தின்பின சுவாமி சாந்தப்பட்டது. நாங்கள் கும்பிட்டபடி நின்றோம். சுவாமி எழுந்திருந்து என்னைநோக்கி நீ என்னை நல்லாய் துயரப்படுத்திவிட்டாய் என்று வேடிக்கையாகச் சொன்னார். அன்றிலிருந்து அந்த ஏவறை வருத்தம் எனக்கு ஒருகாலும் வரவில்லை, இது சுவாமியின் அருள்போலும். எனது வருத்தத்தை நான்கொடுத்த பிட்டுமூலம் ஏற்று தான் துன்பப்பட்டு என்நோயை மாற்றினாரென எண்ணிக்கொண்டேன். இவ்வாறு இக்கதையைப் பொலிகண்டி கந்தவனக்கடவை முருகன் ஆலய முன்னாள் நிர்வாகியான திரு. செல்லையா அவர்களின் மனைவி என்னிடம் கூறினார்.

---

இன்று எந்த ஒரு ஆலயத்திலும் ஒலிபெருக்கி பாவிப்போர் மனநிறைவு கட்டுப்பாடு இல்லாதவராக இருக்கின்றார். இவர்களுக்கு முருகா கோயிலில் எந்தவொரு நன்மை நடைபெற்றாலும் அல்லது கடவுள் நேரில் தோன்றுவது என்றாலும் கூட நாலு பேருக்குக் கேட்க ஒலிபெருக்கி இல்லையே என்று கவலைப்படக்கூடியவர்களாக இருக்கின்றனர். இதனாலே இவர்கள் ஒலிபெருக்கி மின்னொளி முதலிய ஆடம்பரங்களில் ஆவமுடையவராக காணப்

படுகிறார். இந்த ஆர்வம் எக்காலமும் பழுதைத் தேடித்தரும். ஆவம் அருளைத் தேடித்தராது. ஆன தன்மையினாலே இவர்கள் மீளவும் மீளவும் துன்பத்திற்கு ஆளாகிச் சந்ததியின் நலம் எல்லாம் கெட்டு மனிதநிலையின் தரந்தன்றி மிருகங்களாகி அடுத்தடுத்த பிறப்புக்களில் மிருகங்களாகச் சேரும்படி தமக்குத் தாமே ஒரு வினைவிளைவைத் தேடிக் கொள்வார்கள். அடுத்து உடம்பு சீதோஷ்ண நிலை சமமாக இருக்கும்போது ஏதும் நோய் காணப்படுவதில்லை. ஆனால் உடலில் சிறிது கோளாறு ஏற்பட்டவுடன் நோய்வருகின்றது. இந்தக் கோளாறு தீர்ந்தவுடன் நோய் குணமடைகிறது. ஆகவே உடம்பில உள்ள கோளாறு தீர்வதற்கு முதற்படி அமைதி வேண்டும், எல்லா வைத்தியரும் நோயாளரிடம் சொல்வது ஆறுதலாக இருந்து மருந்தைச் சாப்பிடுங்கள் என்றே சொல்வார். பெண்போகம் வீண் அலைச்சல். அதிக உணவு மது மாமிசம் மனவியாகூலம் இவை நோய்ப்பட்டார் தவிர்த்தல் நலம் என்பது வைத்தியநூல் கூற்றாகும்.

இராமகிருஷ்ணமிசனில் நான் தங்கியிருக்கும் போது அங்குள்ள ஓர் சுவாமிக்கு காய்ச்சல் வந்தது. அன்று அவர் என்னை நோக்கி இன்று எனக்குக் காய்ச்சல் நான் எனது அறைக்குப் போகிறேன் எனக்கூறிவிட்டுத் தனது அறைக்குள்சென்று தங்கினார். பின் ஓரிருநாள் வெளியே வரவில்லை. மூன்றாவதுநாள் வழமைபோல வந்தார். சுவாமி எப்படிச் சுகம் எனக்கேட்டேன். இப்பொழுது சுகம். யாருடைய மருந்து என்றேன். அப்பொழுது அவர் நான் யார் மருந்தும் சாப்பிடவில்லை. சிறிது வெந்நீர் அருந்திக்கொண்டு பேசாது அமைதியாக இருந்தேன். எல்லாம் சரியாகவந்தது என்று கூறிய பின்னர் என்னை நோக்கி நோய் என்பது என்ன? உடம்பில் உள்ள கோளாறு. அது அதிக வேலை கூடா ஒழுக்கம் இவற்றால் ஏற்படுவது. ஆதலால் உடம்பிற்கு ஆறுதல் கொடுத்தால் உடம்பு தன்னைத்தானே திருத்தி நல்நிலைப்படுத்திக் கொள்ளும் என்றார் இவருடைய வார்த்தை எனக்குத் திகைப்பாக இருந்தது. சரிசரி நோய்வந்தாலும் வராவிட்டாலும் நல ஒழுக்கமும் அமைதியும் என்றும் மனிதர்க்கு அவசியம் வேண்டியன என்பது புலனாயது.

ஆகவே ஆலயம் ஆன்மா லயப்படும் இடமாக இருப்பதைக் கெடுப்பவா ஏன் செய்கிறார் என உணர்ந்தால் மனக்கட்டுப்பாடு இலாமையாலே செய்கிறார். மனக்கட்டுப்பாடு மனநிறைவு மனதின் சமநிலை இவற்றை விடுத்து நிற்பார் அனைவரையும் நாம் மனநோயாளர் என்றே சொல்வோம்.

மனநோயாளர் கண்டபடி கூக்குரலிடுவார் கண்டபடி பிதற்றுவார் மருந்து உண்ணார். சிலவேளை நோய் மிகுந்தால் வீட்டில் உள்ள பொருள் ளைச் சிதற அடித்துப் பல வெறித்தனம் செய்வார்.

இன்று எமது நாட்டில் ஒலிபெருக்கி பாவிக்கும் அத்தனைபேரும் மனநோயாளராகவே இருக்கக் காணலாம், இவர்களுக்கு ஆலயம் என்றால் என்ன என்பது தெரியாது. ஆன்மா என்றால் என்ன தெரியாது. லயப்படுதல் என்றால் என்ன என்று தெரியாது. ஏதோ கோயில்சென்று சத்தம்போட்டுக்குளறிக்கத்திக் கூத்தாடுவதுதான் சிறந்ததருமம் என எண்ணுகிறார்கள். சைவக்கோவிலின் தருமத்வதும் கும்பிடுவாரது நலத்தையும், அயலில் அமைதி விரும்புவோரையும், கல்வி பயிலும் மாணவரது நன்மையையும், நோயாளரது நன்மையையும் மனதில் கொள்ளாது ஒலி பருக்கியை பெரும் சத்தத்தில் குளற விடுவாரை மனநோயாளர் என்றே கூறவேணடும்.

ஒரு குடும்பத்தில் மனநோய் பீடித்த பிள்ளையால் அக்குடும்பம் முழுவதும் துயராவதுபோல் இன்று எம்நாட்டில் இந்த ஒலிபெருக்கும் மனநோயாளரால் எல்லா ஆலயங்களும் அயலில் இருப்பாரும் மிகவும் துன்பப்படுகின்றனர்.

இருந்துபாருங்கள் ஆலயங்களில் ஒலிபெருக்கி பாவித்தோர் பாவிக்கத் தூண்டினோர் அதில் பேசுவோர், பேசுவதைக் கேட்போர் இவர் அனைவரும் கேடுறுவர். அரசன் அன்றறுப்பான், தெய்வம் நின்று அறுக்கும். இது சாபவார்த்தை அன்று. உண்மை தெளிந்து சைவமக்கள் இனிபாதல் உணர்ந்து உய்யும்பொருட்டுத் தெரியப்படுத்தும் அமிர்தவார்த்தை!

# காணும் கண்ணில் காணும் கண்ணாக கலந்து நிற்பார் கடவுள்

## கேன உபநிடதம்

ஒருநாள் வண்ணை வைத்தீஸ்வரப் பெருமான் ஆலயத்து அருகாமையில் உள்ள கடை ஒன்றில் எனது சையிக்கிளை வைத்துவிட்டு பஸ்ஸில் வேலைக்குச் சென்றேன். அக்காலத்தில்நான் பின்னேரம்வந்து சிவதொண்டன் நிலயத்தில் புராணத்திறகுப் பயன் சொல்பவன். எனது வேலையால் திரும்பி மாலை 5 மணிக்கு சயிக்கிளை எடுத்துக் கொண்டு சிவதொண்டன் நிலயம் போவதற்கு வசதியாக அங்கு சயிக்கிளை வைத்திருந்தேன். அக்கடைக்கு யோகசுவாமி வருபவர். சிலநேரம் அங்கு தங்கி இப்பபவர். அக்கடையில் ஓர் கணக்கப்பிள்ளை மட்டும் உண்டு. தொழில் நிலயம் வேறிடம்.

இப்படி நான் சைக்கிள் வைத்துவிட்டுப்போன அன்று திரும்பிவரும் நேரத்து யோகசுவாமி அங்கிருந்தார். கணக்கப்பிள்ளை காணப்படவில்லை. நான்சென்று வழமைபோன்று சைக்கிளை எடுத்தேன். யோகசுவாமி தடுத்து அதை எடாதே என்றார். சுவாமி இது என்னுடைய சைக்கிள் என நான் சொன்னேன். அது உனது சைக்கிளென்பது எனக்குத் தெரியாது? ஆளில்லாத நேரததில் நீ இங்கு ஒன்றும் தொடப்படாது என்றார். ஆதலினாலே கணக்கபிள்ளை வருமவரையும் அங்கு தங்கிநின்றேன். அப்போது யோகசுவாமி என்னை நோக்கி இப்போது சைக்கிளில் எங்கு செல்லப்போகிறாய் என்று கேட்டார். நான் சொன்னேன் சுவாமி சிவதொண்டன்நிலயத்துக்குத் தொண்டு செய்யப் போகின்றேன் என்றேன். சரி அப்படியாயின் தொண்டுசெய்பவர் யாரெனக் கேட்டார். சுவாமி தான் தொண்டுசெயகிறேனென்று நான் பதிலளித்தேன். உடனே சுவாமி ஓம் சரி! நல்ல பதில், நல்ல வார்த்தை. உனக்கெல்லாம் தெரிகிறது தானே என்று கூறிக் கடவுள் தனக்குத்தானே தொண்டுசெய்துகொள்ளுகிறார் என்பதுதான் பெரியோர் முடியும் என்றார். கீழே தர்ப்படும் கேன உபநிடநம் இக்கூற்றைத் தெளிவுபடுத்துவதைக் காணுங்கள்,

## கேன உபநிடத தோத்திரம்

ஓம் பிரமம் எங்கள் இருவரையும் காப்பாற்றக் கடவது. எங்கள் இருவர் மீதும் பிரமம் அறிவின் பயனைத் தரக்கடவது. நாங்கள் இருவரும் அறிவினைப் பெற்றிடற்கு உற்ற தைரியத்தை பெற்றுக் கொள்வோமாக. நாங்கள் இருவரும் கற்றடும் எவையும் உண்மையெனக் காண்பிக்கட்டும். நாங்கள் இருவரும் ஒருவரில் ஒருவர் கருத்து வேறுபாடு அல்லது பகைமை பாராட்டாதிருப்போமாக!

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

ஓம் எமது உடம்பின் வெவ்வேறு அங்கங்கள் எமது நாக்கு பிராணன் கண், காது, அத்துடன் எமது வைரியம் அதுவநின்றி எமது உணரும் கருவிகளான இந்திரியங்கள் உண்மையில் யாவும் பிரமமே! (சிவனே!) இப்படியே உபநிடதங்கள் முடிந்த முடிபாக அறுதியிட்டு சொல்வன ஆதலால் நாம் எப்பொழுதும் பிரமம்தான் எல்லாம் என்பதை மறக்காதிருப் போமாக. பிரமம் எங்களை மறக்காதிருப்பதாக இநத உண்மையை நாம் தெளிந்கிடப்பிரமம் (சிவன்) எங்கடகு தெளிவைத் தராமல் விடமாட்டாதிருக்கடவது. நாமும் இப்பிரம உணர்வினை மறக்காதிருக்கக்கடவோம். உபநிடதங்களில் சொல்லிய தருமம் எல்லாம் எம்மை வந்து அடைந்து கொள்ளட்டும் நாம் முற்றிலும் பிரமத்திற்கு (சிவன்) ஆளாகினோம் பிரமமே இவை எல்லாம் எம் எம்மை வந்து சேரட்டும்

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

குறிப்பு:– காப்பது கடவுள் ஒருவனே; காவலின் பயன் அறிவைப்பெற உதவலாகும் அறிவின் பயனாவது கடவுள் அல்லது பூரண இன்பம் அழியாமையான நித்தியம்,

அறிவு உடையர் இவ்வுலகில் எல்லாம் உடையர் என யோகசுவாமிகள் சொல்வார் அறிவு என்பது மேலான நிலையைப் பெறுதல். சைவர் சொல்லும் மார்க்கம் அறிவு மேல்நிலைப் படல் என்பதாகும்.

அறிவு பெறற்கு தைரியம் வேண்டும். தைரியம் இல்லாவிட்டால் கோழமையே மிகும். எடுத்த எதற்கும் அச்சமே தோன்றும். நீதியுடன் வாழமுடியாது. தைரியமின்மை பல தீங்கும் உடையவர்க்கு அடிமையாகி வாழும் நிலையை உருவாக்கும் ஆதலின் அறிவு பெறற்கு முதற்கண் தைரியம் வேண்டும் என பிரார்த்திக்கப்படுகின்றது.

உண்மை தெளிந்தார் கூறுகின்ற நா முதலாக கண், காது யாவும் சிவனே எனத் தெளிவார்கள். திகைப்புக்கள் வரும்போது தெளிவு தருபவன் சிவனே! ஆதலால் என் அங்கமெல்லாம் சிவன் என காண அவன் அருள் புரியட்டும் என்பதும் இத்தோத்திரமாகின்றது!

கூறும் நாவே முதலாக கூறும் கரணம எல்லாம் நீஎன்பது தெளிந்தேன் வாழ்வில் சிக்கல்களில் திகைப்பு வரும்போது தேற்ற வேண்டாமோ எனற திருவாசகத்தை ஒப்பு நோக்குக.

## முதலாவது மந்திரம்

குருவிடம் சீடன் கேட்டான்:

ஓம்

யாருடைய எண்ணம் நிர்ணயித்தபடி மனம் தனது பொருளின்மேல நாட்டம் கொள்கிறது. இநத மனத்திற்கு மூலமான பிராணன் யாருடைய கட்டளைப்படி தனது கடமையைச் செய்கிறது. ஆருடைய எண்ணப்படி மனிதர்கள் வாயால் சொல்லினால் பேசுகிறார்கள். எந்தக் கடவுள் கண்ணைப் பார்க்கச் செய்வது; காதைக் கேட்கச் செய்வது,

குறிப்பு;– பலரும் மனம் தன்பாட்டில் பல பொருளையும் நினைப்பது என்பதாக நினைப்பர், ஆனால் அது உண்மை அன்று. மனம் தனக்கு எஜமான் இல்லை. இன்னொன்றின் அடிமை. அப்படி அது தனக்குசதானே எஜமானுகினால் தான் எண்ணுவதெல்லாம சாயாகவரும். அப்படியானல் புத்திசாலி தீங்கைப்புரியாமல் விட்டிடுவான் மனம் தீங்குகளைப் புரியும்போது தான் பிழையென உணர்ந்தும பலர் செய்யாதே எனத் தடுத்தாலும் தான் தீங்கினைச்செய்து பின்னா சங்கடத்திறகுள்ளாகிறது, இதனாலே மனம் தன்வயமான சுதந்திரமுடையதன்று.

பிராணன் என்பது உயிர்! அது மனத்திற்கு அப்பாலானது. இது இல்லாமல காண்டல் கேட்டல் முதலியன நடைபெறாது.

கடவுள்: பிரகாசமான ஒளிப் பொருள். தீங்கினை நீக்கி உய்விக்க வல்லவர். அவர காது கண் நாக்கு மூக்கு இந்திரியங்களை இயங்கச்செய்பவர்.

ஓர்க்கின்ற செவியை சுவைதன்னை உணரும் நாவினை காண்கின்ற கண்ணை என சுந்தரர்பெருமான் தம தேவாரத்தின்மூலம் தெரிவிக்கின்றார்.

சிலரின் எணணம் உடம்பில் இந்தக் கண் காது இருப்பதால் உடம்பு தான் காணகிறது கேட்கிறது என்றதாக. மனம்தான் எல்லாச்செயலிற்கும் காலாக உள்ளது என்றதாக.

ஆனால் உண்மை அதுவன்று. அறிவாளி தான் உடம்பு என எண்ணான். பதிலாக இந்த உடம்பு கண் காது முதல் கருவிகள் எல்லாம் தானான ஆன்மாவில் உள்ளது எனக் கண்டு கொள்வான்.

உடம்பு கண் காது கருவிகள் அநித்தியமானவை. நித்தியப்பொருள் ஆன்மாவே! ஆன்மா உடம்பைப் பெற்றதே அன்றி வேறில்லை.

இது ஒருவர் செருப்பை அணிதல் போன்றது. செருப்பு அணிந்தால் செருப்புக்கேய இன்னுமொரு செருப்பு என்பதுபோல.

# காந்திய சேவாசங்கத்தின் ஊழல்கள்

காந்தியம் கதர் என்ற கொள்கையில் எம்நாட்டில் பல சேவைகள் செய்கிறோமென்று வீரமுழக்கம் செய்தார்கள். அனாதை இல்லம் நடத்தினார்கள். பூதான இயக்கம் நடத்தினார்கள். மேடையில் சாதீயம், வேட்டியில் கதர், வீரத்தில் வாய்வீரம் ஆனால் சேவையாளரின செயல்களை நோக்கும்பொது திகைக்கவைக்கும் பல அநீதிச் செயல்கள் பற்றிச் காந்தீயசேவா சங்கத்தைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் எமது சந்திரதீப அலுவலகம் வந்து கவலைப்பெருக்குடன தெரிவித்தார். இவரை நான் முன்னே தெரிந்திருக்கவில்லையாயினும் காந்தீயசேவாசங்கத்தைப்பற்றி முன்னமேயே தெரிந்திருந்தேன். அவர்கூறிய வார்த்தைகள் நான் காந்தீயசேவா சங்கத்தைப்பற்றிக் கொணடிருந்த அபிப்பிராயத்தை உறிதிப்மடுத்துவனவாய் அமைந்திருந்தன. காந்தீய தத்தவத்துக்கும் சைவசமய தத்துவத்துக்கும் ஒருமைப்பாடே கிடையாது. ஏனெனில் காந்தி ஒரு சைவரல்லர். நாம அவரை ஒரு சமயப்பெரியார் என்றும் ஏற்றுக்கொள்ளமாட்டோம். கதர் கட்டிக்கொண்ட சைவர்கள் சிலர் எமது சைவக்கொள்கையைச் கடைப்பிடிக்காது ஏன்? காந்தியக் கொள்கையைக்கூடக் கைவிட்டுப் போலித்தனமான செயல்களில் ஈடுபட்டு வருவதையும் அந்த ஆசிரியரின் கூற்றுத் தெரிவிக்கிறது. காவி உடுப்பவரும் கதர் அணிபவரும், கலர்ஆடை தரிப்பவரும் ‘ஓம் முருகா’ என்ற சால்வை போடுபவரும் கபடவழிகளில் தாம் நடப்பதற்குஅதைஒரு பாதுகாப்பாக அணிகிறார்களே ஒழிய உண்மையில் நாம் ஒழுக்கமுடன் நடப்போம் என்பதற்காகவல்ல. எனவேதான் சைவ சமயம் தூய்மையான வெள்ளை நிறத்தை நாடி நிற்கிறது. இதைத்தான் பெரியபுராணமும் ‘வெள்ளைகில்லை கள்ளச்சிந்தை.’ எனக் கூறிநிற்கிறது.

# கொழும்பில் தேர் உற்சவத்தில் அடிபிடி

## சைவத்தின் சரியான மார்க்கத்தில் செல்லாத கோவில் நிர்வாகம்-பிராமணர்க்கு இக்கதி வரும் என்ற சந்திரதீபத்தின் கூற்று உண்மையாகியது!

எமது வணக்கத்திற்குரிய சந்திரதீபம் ஆசிரியர் அவர்கட்கு,

நாம் தங்களுக்கு அறியத்தர வேண்டியன, கடந்த ஞாயிற்றுக் கிழமை ரௌத்திரி வருடம் பிறந்ததும் வருடந்தோறும் கொழும்பு முத்துவிநாயகர் ஆலயத்தில் இரதோற்சவம் நடப்பது வழக்கம். அங்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் தேங்காய் அடிப்பதும் வழக்கம் இவ் விதம் இருக்க அங்கு பல வருடமாக தேர் கட்டும், கடமை புரிபவருக்கு தன்னைவிட்டால் தேர் இழு படமாட்டாதென்ற நினைப்பு. அவரின் நோக்கம் செட்டித்தெரு முழுதும் தன் கையில்தான் உள்ளதென்று அவருக்கேற்றபடி அங்குள்ள குருக்கள்மாரும். அங்கே பலவருடமாக இருந்துவரும் குருக்கள் கோயில் மனேச்சரிடம் சொன்னார். நான் தான் இந்தமுறை கொடியேற்றவேணும் என்று அந்தமனேச்சரோ ஒரு பிராமணன. கோயிலில் பிராமணன் மனேச்சராகஇருந்தால் கோயில் எப்படி முன்னேறும்? அவர் அங்கு பல வருடகாலமாக நடந்த முறைகளையெல்லாம் மாற்றி அமைத்த வராவர். அதனால் அந்தக் கோயிலில் உள்ள நிர்வாகத்தார் அவர் தான் நல்லவர் என்று அவருக்கு கிரீடம் சூட்டிவைத்துள்ளார்கள். அதைக்கண்ட பிராமண மனேச்சரும் தன்னை விட்டால் கோயில் நடக்காது என்பது அவரின் நோக்கம் இப்படியான கட்டத்தில் அக்கோயிலில் இரு குருக்களிடையில் பெரும் பிரச்சனை ஏற்பட்டுவிட்டது இந்த நிர்ப்பந்தத்தில் மனேச்சர் பார்த்ததார் தான்தப்பிக்கொள்ள வேண்டுமே! அவர் சொன்னர் வேறு குருக்களைக் கொண்டு கொடியேற்றவேண்டுமென்று அதை கேள்விப்பட்ட குருக்களில் ஒருவரான ''சாம்பதணிகாசலக்குருக்கள்'' உடனேகூறினர் நான் கொடியேற்றவேண்டும் அல்லது விலகிவிடுவேன் என்று. மனேச்சர் உடனே கூறினர் நீர் இந்த மாதத்துடன் விலகிவிடலாம் என்று. பின் அந்தக் குருக்கள் மன்னிப்புக்கேட்டுக் கொண்டார். இது இவ்விதம் இருக்க இன்னுமொரு குருக்கள் கோயிலில் உள்ள குருக்கள்மார் கொடி ஏற்றக்கூடாது அவர் கொடியேற்ற தகுதியற்றவர்கள். ஆனபடியால் நான் தான் கும்பாபிசேகம் செய்தேன் இம்முறை நான் தான் கொடியேற்ற வேண்டும் என்று கூறினர். அந்தக் குருக்கள் எந்த நேரமும் மனேச்சரை கண்டால் பயப்பிட்டுத் தான் அங்கு கொடியேற்றினர். கொடியேற்றும் பிரச்சனை கடைசியில் தேரில்தான் முடிந்தன.

வருடப்பிறப்பன்று அங்குதேர். தேர் செட்டித்தெரு வழியாக வந்தது ஐந்துலாம்பு சந்தி ஊடாக வந்து செட்டித்தெரு நகைக் கடைகளூடாக வரும்போது தேர்கட்டுபவர் (பாலா) தேரின் அச்சாணியைக் களட்டி விட்டு கொசிக் கடைப்பக்கம் போய்விட்டார் இரண்டு மணிநேரம் கழித்து வந்தார். வந்தவுடன் செட்டித்தெருவில் பிரபல வியாபாரியான லலிதாநகைமாளிகை உரிமையாளர் கேட்டார் ஏன் அச்சாணியைக் களட்டினீர்கள். தேரை ரோட்டிலே விட்டு விட்டு நீர் எங்கே போய்வா நீர் என்று கேட்டார். அதைக்கேட்டவுடன் பாலா என்பருக்கு கோபம் வந்துவிட்டது. அந்த நகைக்கடைக் காருக்கு அடித்து விட்டார். பின் பெரும் சண்டை ஏற்பட்டு பாலாவின் சகோதரர் எல்லாரும் வந்து வாள்வெட்டு போத்தில்அடி மேலே தேரில் இருந்த குருக்கள் மற்றும் நிறையப்பேருக்கு சரியான இரத்தக் காயமாக இருந்தார்கள். அந்த தேரில் காட்சி தந்த பஞ்சமுக முத்து விநாயகருக்கும் சரியான பயம் இப்படியான கட்டத்தில் பொலிஸார் உடன் விரைந்தார்கள் பாலா அவரின் தம்பிமார் மற்றும் ஒரு ஐயர் எல்லோரையும் விளக்கமறியலில் வைத்துள்ளார்கள். கடைசியாக தேர் கோவிலை அடைந்த நேரம் மாலை ஏழு மணி.

அங்கு நடந்த சம்பவம் வருடப்பிறப்பில் நடந்தபடியால் கோயிலில் ஏதாவது ஏற்படுமா?

அங்கு பல வருடங்களாக கடமையாற்றிவந்த போற்றிக் குருக்களை தாமரைப்பூ வீட்டுக்கு கொண்டு போனதன் காரணமாக அந்த மனேச்சர் உடன்விலக்கிவிட்டார்.

இப்படிக்கு
ஆர்' இராமநாதன்
செட்டியார் தெரு
கொழும்பு — 11

# வயிரவ சூலத்தின் மேல் சாயிவாபா

## சாயிவாபா சைவனுமல்ல ஞானியுமல்ல அவன் ஒரு குறளி வித்தைக்காரன்.

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்

சந்திர தீபம் ஆசிரியர்
அவர்கட்கு,

ஐயா'

தங்களுடைய சந்திரதீபம் பத்திரிகை மூலம் இந்து சமயக் கருத்துக்களை மக்களிடையே பரப்புவதன் மூலமும், ஆங்காங்கே சமய விதிமுறைகளுக்கும், ஒழுக்கங்களுக்கும் எதிராக நடக்கின்ற சமய வாதுகளையும், பிராமணர்களையும் துணிவுடன் கண்டிப்பதையும் நான் பெரிதும் பாராட்டுகிறேன். மேலும் எனது ஊரில் உள்ள வயிரவ கோவிலையும் அதை சைவசமயத்துக்கு எதிராக ஒரு சில போலி அவதார புருஷர்களால் வழிநடத்தப்படுவதையும் இக்கடிதமூலம் தங்களுக்கு அறியத்தர கடப்பாடு உடையவன்.

சுதுமலை அம்மன் கோவிலில் இருந்து வடக்கு வீதிப்பக்கமாக சங்கை வீதியில் இவ்வயிரவ கோயிலமைந்துள்ளது. இக் கோயில் பல தலைமுறைளாக சிறு கொட்டிலின் கீழ் ஆதரிக்கப்பட்டு வந்தது. கடந்த 4,5 ஆண்டுகளில் இது கல்லினால் கட்டப்பட்டு பொங்கல் பூசைகள் இனிது நடைபெற்று வந்தது. தற்போது இக்கோயிலில உள்ள வயிரவ சூலங்கள் அத்தனையும் மறைக்கப்படும் அளவுக்கு வயிரவ சூலத்திலேயே ''சத்திய சாயிபாபா'' வினுடைய படங்களும் யேசுகிறிஸ்து நாதருடைய படங்களும இக்கோயிலை அலங்கரிக்கின்றன. இங்கு தினமும் பஜனை நடைபெறுகிறது. அதாவது சாயிபாபாவின் புகழ் பாடப்பட்டுவருகிறது. வெள்ளி, செவ்வாய்க்கிழமைகளில் முருகன்கலை, அனுமான்கலை ஆகியன பக்தர்களுக்கு ஏற்பட்டு ஒரே கூக்குரலாக ஒலிக்கிறது. இங்கு கலைகள் வருபவர்களும சாத்திரம் சொல்பவர்களும் பாவிகள் என்பதை நான் நன்கறிவேன். சத்தியசாயிபாபா ஓர் மனிதர். அவர் மனிதர் செய்கின்ற செயல்கள் அனைத்தையும் செய்கிறார். அவரை அவதாரபுருஷர் என்றால் அவரை தனித்து வணங்கலாம். மேலும் அவர் ஒரு வைஷ்ணவ சமயத்தைச் சேர்ந்தவர். இப்படி இருக்க தெய்வத்துடன் இவரை வைத்து வணங்குவதை நான் மிகவும் வெறுக்கிறேன். மேலும் இவ்வாண்டுப் பொங்கலையும் நடத்துவதற்கு ஒரு சில சைவ அடியார்கள் வேதனைப்படுமளவுக்கு அங்கு சாயிபாபாவின் படமும் யேசுகிறஸ்து நாதரின் படமும் நிறைந்து போயிருக்கின்றன. எனவே தாங்கள் இக்கோயிலுக்கு நேரில் விஜயம் செய்து உண்மையை அறிந்து சென்றால் மிகவும் நன்றாக இருக்கும் அதன்பின் உங்கள் பத்திரிகை மூலமும் உங்களுடைய பணியின் மூலமும் மீண்டும் இவ்வாலயத்தை வயிரவர் ஆலயமாக மாற்றத்தக்க முயற்சியில் ஈடுபடவும். உங்கள் பணி தொடர இறைவன் அருள் பாலிப்பாராக.

இங்கனம் உண்மையுள்ள
சைவஅபிமானி
இ. முருகதாசன்

# கும்பாபிசேகத்திற்கு குறுக்கே நிற்கும் குள்ளர்கள்

## சாமியைப் பிரட்டுவாரும் சாமி காரியம் தடுப்பாரும் தரத்தில் சமமானவர்களே

நவாலி வடக்கில் உள்ள குருக்கள் கோயிலெனப் பலராலும் அழைக்கப்படும் அட்டகிரிக் கந்தசுவாமி ஆலயத்தில் சிறிது காலத்திற்கு முன் பரிவார மூர்த்திகளைப் பிரட்டிவிட்டு அங்கு ஸ்தாபிக்கப் பட்ட மந்திரத் தகட்டை தட்டிக் கொண்டு சென்று விட்டார்கள் சில மனிதர்கள். இதை அறிந்து அடுத்த நாளே அவ்விடத்தில் சீமெந்துச் சாந்தினால் பூசிப் பிரட்டி எறியப்பட்ட மூர்த்திகளை ஸ்த்தாபித்து பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. இதையறிந்த ஊர் மக்கள் ஒன்று கூடி முன்னையது போல் யந்திரத் தகடுவைத்து மூர்த்திகளை பிரதிஸ்ட்டை செய்து வைக்க வேண்டுமென விரும்பினர். அதை அவ்வாலய குருக்களால் ஏற்றுக் கொண்டு கோயில் எஜமானர்களைக் கண்டு விஷயத்தைக் கூறி தம் ஒத்துழைப்பையும் தருவதாக் கூறினர்.

ஏனோ தெரியவில்லை அந்த விஷயத்தில் கோவில் எசமான் ஒத்துழைக்க மறுத்துவிட்டார். பொறுத்திருந்து பார்த்த ஊர் மக்களுக்கு விசயம் விளங்கிவிட்டது, பக்கத்தே கோவில்கொண்டிருப்பவர் சிவன். அந்தச் சிவன் கோவிலைச் சேர்ந்த குருக்கள் ஒருவர் இதற்குக் குறுக்கேநிற்பதையும், அவருக்கு அந்த முருகன் ஆலயத்து எசமான் ஆமாம் போடுவதையும் அறிந்துகொண்டனர்.

'கோயிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டாம். கும்பாபிஷேகம் செய்யாத கோவிலைச் சென்று கும்பிடவேண்டாம்' என்பதற்காக மக்கள் அங்கு சென்று தம் நாயகனை வழிபடாது விடவில்லை. ஆனால் ஏதோ ஒரு சங்கடத்தில் மாட்டிக்கொண்டுவிட்டவர்கள் போல் மனதைப் பறிகொடுத்து மன வேதனையில் ஆழ்ந்திருக்கும் அதே வேளையில்,

கோவில் எசமானர்களும் குறுக்கே நிறகும் குருக்களமாரும கொடியேற்றத் திருவிழாச் செய்துவிடத் துடியாய்த் துடிக்கின்றனர்'

இவர்கள் அந்தக்கோவிலில் நித்திய நைமித்திய பூசைகளுக்கு ஒருவிதமான உதவியோ ஒத்தாசையோ செய்வதில்லை. அப்படியிருக்க கொடியேற்றத் திருவிழா செய்ய முன்நிற்பது வருவாயை ஒரு நோக்கமாகக் கொண்டதென்பது நன்குபுலனாகிறது. இப்போது அக்கோவிலில் குடிகொண்டிருக்கும் மூர்த்தி 1942-ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. அம்மூர்த்தி ஸ்தாபிக்கப் பட்ட காலந்தொட்டு எவ்விதமான நன்மையும் ஏற்படவில்லை என்பதும் 1967-ம் ஆண்டு நடைபெற்ற கும்பாபிசேகத்தின்போது இக்கோவில் முகாமையாளர் கொலை வழக்கொன்றின் நிமித்தம் றிமாண்டில் வைக்கப்பட்டிருந்ததும் ஊரினில் எதுவித முன்னேற்றமோ செல்வச் செறிப்போ இல்லாதிருப்பதையும் அறிந்து பிறிதோர் மூல மூர்த்தியை பிரதிஷ்டை செய்வதற்கு ஊர்மக்கள் விரும்பி நிற்பதையும் அதை எசமானரும் அயலில் குடியிருக்கும் குருக்களும் சேர்ந்து எதிர்த்து எதையும செய்யவிடாதது கேள்வியுற்ற சந்திரதீபம் ''சைவமும் இல்லையோ, தெய்வமும் இல்லையோ, சான்றோரும் இல்லையோ இதைச் செய்வதற்கு'' என்று ஒரு கேள்வியை எழுப்புகின்றது.

அதற்கு 'ஏன் சான்றோரில்லை என்பதுபோல் இக்கோவிலில் ஏற்பட்டுள்ள குறைகளையும்' புதிய மூர்த்தியைப் பிரதிட்டைசெய்து கும்பாபிஷேகமும் செய்வதற்கு வேண்டிய செலவனைத்தையும் தாமே ஏற்றுக்கொள்வதற்கு ஒரு தனவந்தர் முன்வந்ததையும் அதை மேலே சொல்லியவர்கள் தடுத்துவிட்டனர் என்பதையும் சந்திரதீபம தெரிந்து வேதனைப்படுகின்றது. சாமியை பிரட்டினவன் தலைமறைவில் இருக்கிறன். கோயிலில் நடந்த பிழைகளை நிவர்த்தி செய்து, நல்மூர்த்திகளை பிரதிஸ்டை செய்ய எதிர்க்கும் கூட்டமும் துணிந்து நிற்கிறது. இருவரும் வயிற்றுப்பிழைப்பிற்காகவே செய்கின்றனர். கொலைப்பழி செய்வார் தெய்வத்துக்கும் அஞ்சார். இதை சந்திரதீபம் நன்குணர்ந்துள்ளது. வஞ்சனையின் கோட்டையாகிய மலையை வேலால் பிளந்து அட்டகிரி ஆக்கியவனே இதற்கு அருள்செய்யவேண்டும்.

தெற்கேவீற்றிருக்கும் தந்தையாருக்கு வடக்கே இருக்கும்மகன் நன்றாக வருவது விருப்பமில்லை எனவே எண்ணத் தோன்றுகிறது,

இப்படிப்பட்ட ஆலயங்கள் மேல் அரசாங்கம் கவனம் எடுத்தாலென்ன என்று சந்திரதீபம் கருதுகிறது.

இட்டமுடன் மக்கள் இசைவுடன் இன்புற்று உனைத்தொழ அட்டகிரியானே அருள் செய்வாய்' என்று சந்திரதீபம் ஆண்டவனை வேண்டுகிறது.

# இங்கு வராதே வெளியே போ என்றனர் சிவதொண்டன் நிலயத்தினர்

## வேதாந்த மடம் செல்லும் வழியில் சிவதொண்டன் நிலயமும் செல்கின்றதா?
## பணக்காரரின் ஆதிக்கத்தால் சிவத்தொண்டன் நிலயம் அவதொண்டன் நிலயமாகக்கூடாது

ஒருநாள் காலை சிவதொண்டன் நிலயத்தில் சந்ரதீபம் பத்திரிகை கொடுக்கும்படியாகச் சென்றேன். அப்பொழுது அங்குள்ள பொறுப்பாளர் என்னைநோக்கி நீர் இங்கே வரப்படாது. உடன் வெளியிற்போய் விடவேணும். உமக்கும் எங்களுக்கும் கதைவில்லையென்று கடிந்த குரலில் சத்தமிட்டார். அப்போது நான் தணிந்தவார்த்தையால் வழமையாக நீங்கள் விரும்பி வாங்குவதால் நான் கொண்டுவந்தேன். இதைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்றேன். அப்போது அவர் இங்கு உமது பத்திரிகை தேவையில்லை. அதைக்கொண்டு போய்விடும் என்றார். நான் அவருடைய வார்த்தையினால் மனவேதனைப்படவில்லை. ஏனென்றால் இதற்கு முன்பும் முன்னாள் தேசாதிபதி சோல்பரி ஈருவின் மகன் சந்நாசி என்பவர் செங்கலடி சிவதொண்டன் நிலயத்திற்குப் பொறுப்பாய் இருக்கும்போது ஒருநாள் நான் அங்கு போனநேரம், நீ வெளியிலே போய் விடு என்றார். அன்றிலிருந்து இன்று வரை நான் அந்த நிலயத்திற்குப் போவதுமில்லை. ஆகவே இவருடைய வார்த்தைகள் எனக்குப் புதிதாக இல்லை.

நான் ஒரு பத்திரிகை வெளியிட்டேன். அந்தப் பத்திரிகையின் பிரதி யொன்று அவர்களுக்கு அன்பளிப்பாகக் கொடுப்பது வழக்கம். இது கடந்த இரண்டரை ஆண்டுகளாக நடந்துவருவது. ஆகையினாலே அந்த நிலயில் அதைக்கொண்டுசென்றேன். நான் சிவதொண்டன் நிலயத்தில் முன்னர் காலங்களில் யோகசுவாமிகளின் கட்டளைப்படி புராணத்திற்கு பயன்சொல்லி வருபவன். நான்கு ஆண்டுகளுக்குப்பின் சுவாமி இனிப் போதும் நீ அங்குபோக வேண்டாம் என்றார். நான் பின்னர் போவதில்லை. சிலகாலங்களில் சிவதொண்டன் சார்பில் சிவபணிகளைச் செய்யக்கேட்டால் நான் அங்குபோவதுண்டு. நான் இந் நிலயத்தில் ஒரு அங்கத்தவன். சாதாரணமாக அல்ல. ஆயுட்சந்தா அங்கத்தவன்.

தற்போது கந்தர்மடம் வேதாந்த மடத்தற் கண்ணயமற்ற நடத்தைகளும் பணமோசடிகளும் வாக்குவாதங்களும் முதல் பல சீர்கேடுகளும் நிரம்பி இதனாலே அங்கத்தவர்கள் இரு கட்சியாகப் பிரிந்து நீதிதலத்துக்கு வழக்குக்குச் சென்று பெரும் சஞ்சலப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்; ஒருகட்சி பணமோசடி செய்வதும் மறுகட்சி அதைச் சுட்டிக் காட்டினால் உங்கள் தவறை உணராது இன்னும் வில்லங்கங்களைக் கூட்டச் செய்வதும் — உண்மையற்ற பல பொய்களைப் பேசவேண்டிய நிலைகளும் ஏற்பட்டுக் கொண்டது. இதனுல் அங்குள்ளவர்க்கு ஓர் அறநிலயம் என்ற இடம் இருக்கவேண்டிய தோன்மை கெட்டுச் சண்டை சச்சரவுக்குரிய இடமாக மாறிக்கொண்டது. அங்கிருந்த ஒரு சாமியைக் கொலை செய்யும் நிகழ்ச்சிகூட நடந்தது.

ஆகவே வேதாந்தமடம் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் உயர்ந்த வேதாந்தக் கொள்கைகளைப் பயின்று ஆத்மீகத்தில் சிறந்த ஒருஞான நிலையைப் பெறுதற்காகும். பின்னர் அந்த அறநிலயத்தின் பரிபாலனம் பணம் படைத்தோர் சிலரின் கையில் அதை ஆரம்பித்த சுவாமி ஒருவராற் கொடுக்கப்பட்டது. அவர் அப்படிக் கொடுத்ததன் நோக்கம் அவர்கள் அதைச் செவ்வனே பார்ப்பார்கள் என்ற நன்நோக்கமாகும். ஆனால் பணம் படைத்தோர் என்ன செய்தார்! அதைத் தமது சொந்த ஆதிக்கமென நினைத்தார். அப்பால் அவருடைய அந்த எண்ணம் பல பிரச்சினைகளை உருவாக்கி நடக்கத்தூண்டி விட்டது. முடிவில் ஆதிக்க வெறியும் பணமோசடிகளும் தலைதூக்கின. தாம் செய்வது யாவற்றையும் சரி யென்றே ஏற்கவேண்டும் என்றதே நிர்வாகத்தின் கொள்கையாக வந்தது. இந்த நிலயில்தான் இவர்களின் செயலைப் பார்க்கும் ஏனைய அங்கத்தவர்களது உள்ளங்கள் வேதனைக்குள்ளாயின. தம் வேதனையைச் சொல்லி இப்படிச் செய்யாதீர்கள் என்றால் இவர் யார் எனக்குச் சொல்ல என்பதே பணக்கார நிர்வாகத்தின் பட்டியலாக வந்தது. அவர்கள் செய்கிறது அத்தனையையும் ஏற்கவேண்டும். ஏதும் குறைகாண முயன்றால் வந்துவிடும் விலங்கம். இந்தநிலையில்தான் வேதாந்தமடம் கிடந்து அவதிப்படுகின்றது. இந்த உலகில் உள்ள மக்களிடையே மனதில் அழுக்கைப் பெருக்கக் கூடிய இருபொருள்கள்; ஒன்று பணம் அடுத்தது அதில் எழுந்த ஆங்காரம்,

பணத்திமிர் சாதித்திமிர் கல்வித்திமிர் உத்தியோகத்திமிர் அரசியல்த்திமிர் இவற்றிலே கிடந்து அழுந்தும் மக்கள் ஒருநாளும் உண்மை வழிக்கு வரவும் மாட்டார் அல்லது உயர்ந்த வழியொன்றிருக்கு அதை நாடவேண்டும் என்ற சிந்தைகொள்ளவும் மாட்டார் இப்படிப் பட்டோரால் எந்த ஒரு அறநிலயத்தையும் மேலோங்கச் செய்ய முடியாது. எக் காலத்திலும் இத்தகையோர் நிர்வாகத்தில் இருந்தால் அந்த அறநிலயங்கள் தலைகீழாக நடை பெறும்.

ஒரு அறநிலயம் நடைபெறுவதற்குத் தன்னலமிலாத கபடமற்ற தர்மசீலர்களின் நிர்வாகத்தின்கீழ் அமைந்தால் அத்தகைய அறநிலயம் என்றும் சிறப்பாக நடைபெறும். உண்மையான நிர்வாகமானால் ஒருவர் ஒரு தவற்றை சுட்டிக்காட்டினால் அதை உணர்ந்து திருந்த முற்படுதல் தான் அந்த அறநிலயத்தின் வளர்ச்சிக்கு ஏற்றசெயலாகும். அதையில்லாமல் இவர் எங்களில் பிழைபிடிக்கிறார். இவரை இங்கு வைத்திருக்கக் கூடாது; இவரை இல்லாமல் பண்ணவேண்டும். இவர் பிழையைக் காண்பித்து மதிப்பைக் குறைக்கிறார் என்று பிழைகாண்பித்தார்மீது கோபிப்பார் தமக்கும் பிழைசெய்து அறநிலயத்திற்கும் பிழைசெய்கிறார்கள். இவையெல்லாம் உடன் தெரியாவிட்டாலும் நாளடைவில் புலப்படும். ஆகையினாலே அற இல்லமயினும் அற இல்ல வளர்ச்சியின்பொருட்டு ஒருவர் நிர்வாகத்தின் பிழைகளைச் சுட்டிக்காட்டினால் அதைஏற்றுத் திருந்தாது தொடர்ந்தும் பிழைகள் செய்தால் அவரைப்போல் பேதையர் வேறு ஒருவரில்லை.

சிவ தொண்டன் நிலயத்துமுன்பாக வைக்கோலால் மறைத்து குருபூசைக்கு விறகு கொண்டுவரப்பட்டது மேன்மையான சைவ நீதி அல்ல என்ற கருத்தை நமது பத்திரிகை மூலம் தெரிவித்தோம். இது நாம் தெரிவித்ததின் நோக்கம் சிவ தொண்டன் நிலயத்தில் குறை காண்பதல்ல. ஆனல் சைவநீதியை சிவ தொண்டன் நிலயம் போன்ற பெரிய அறநிலயங்கள் கைப்பற்றி வந்தால் ஏனைய கோவில்களுக்கு அது ஒரு எடுத்துக் காட்டாக அமையும் என்பதற்காகவே அவ்வாறு குறிப்பிட்டோம். ஆனல் சிவதொண்டன் நிலயத்தார் ''மேன்மை கொள் சைவ நீதியை'' விளங்கிக் கொள்ளாது என் மீது குற்றம் காண முற்பட்டார்கள். அவர்களுடைய வணக்கத்துக்குரிய யோகசுவாமிகள் தன் வாழ்நாளில் முற்றிலுமே உண்மைக்கு இடம் கொடுத்தவர். எக்காலமுமே பிழையான வழிக்கு அவர் ஆளாவதில்லை. அவரே சாமியாக வருமுன்பு அரசாங்க சேவையில் ஈடுபட்டிருந்தவர். அவர் நீர்ப்பாசன இலாகாவில் பண்டகசாலைப் பொறுப்பாளராக் கடமை ஆற்றுங்காலத்து நடந்துகொண்ட செயல்பற்றி நான் இங்கு குறிப்பிடுகிறேன்.

யோகசுவாமி நீர்ப்பாசன இலாகாவில் கடமை ஆற்றும்போது நீர்ப்பாசன வேலைகளுக்குப் பாவிக்க நாற்கடகம் வாங்கினர். அந்த நாற்கடகத்தை வாங்கிய உண்மைவிலையைத் குறித்து அரசாங்கத்திடம் பணம் பெற்றார். இச்செயல் அந்தப் பகுதிக்கு மேலதிகாரியாக இருந்த ஆங்கிலேயருக்குச் சந்தேகத்தை உண்டு பண்ணியது. ஏனெனில் இவருக்கு முன்னுக அப்படி நாற்கடகம் வங்கியவர்கள நாற்கடகம் வாங்கிய விலையிலும் பார்க்க அதிக கூடுதல் விலை குறித்து அரசாங்கத்திடம் பணம் பெற்றிருந்தனர். கூடுதலாக அவர்கள் குறிப்பிட்ட அந்த விலையையே உண்மை விலையென்று அந்த ஆங்கிலேயர் நம்பியிருந்தார். எனவே யோகசுவாமிகள் வாங்கிய நாற்கடகத்தின் உள்ள விலையையே குறிப்பிட்டுப் பணம்பெற ஆங்கிலேய அதிகாரி நினைத்தார், யோகசுவாமி நாற்கடகம் இழைக்கும் ஏழைமக்களுக்கு கொடுக்கவேண்டிய காசைக் குறைத்துக் கொடுத்திட்டார், ஆனதன்மையினுலே மிகுதிப்பணம் கொடுக்க வேண்டும் என எண்ணி யோகசுவாமிகளை அழைத்து முன்பு வாங்கிய விலையையும் அவர்கொடுத்த விலையையும் காண்பித்து மிகுதிப் பணத்தை கொண்டுசென்று கொடுக்கும்படி கூறினார். யோகசுவாமிகள் அதுகேட்டு தான் கொடுத்தது உண்மையான விலையென்று சொல்லவும் அப்பொழுதும் நம்பாமல் தானே நேரில்சென்று விசாரித்தான். விசாரித்தபோது யோகசுவாமிகள் குறிப்பிட்ட விலையே நடைமுறை விலயாக இருக்கக் கண்டான். முன்புள்ளவர்கள அரசாங்கத்தை ஏமாற்றினார்கள் என்பதையும் யோகசுவாமிகள் அரசாங்கத்துக்கு விசுவாசமாக நடந்தார் என்பதையும் தெளிந்து அன்றுதொடக்கம் யோகசுவாமிகளிடம் நன்மதிப்பு வைத்திருந்தான். அப்படியான ஒரு உண்மையான தூய நிலயில் நடந்தபடியால்தான் ஆத்மீக நிலயில் மேம்பட்டவராக விளங்கினர். இதைத் தானும் அவருடைய ஆசிபெற்றுத் தொடங்கப்பட்ட சிவதொண்டன் நிலய நிர்வாகம் விளங்கிக் கொள்ளவில்லை. இந்தச்சரித்திரத்தைத் தெரியாத எவரும் சிவதொண்டன் நிலய நிர்வாகத்தில் இல்லை. இப்பொழுது சிவதொண்டன் நிலய நிர்வாகம் அதை ஒரு அறநிலயமென எண்ணுது ஒரு வியாபார நிறுவனம்போலக் கருதிச் செயற்படுகிறது. பல கூட்டங்களில் அந்த நிர்வாகத்தினர் உலகில் எல்லாரும் பிழைசெய்கிறார்கள். ஆகையினுலே நாம் செய்தால் என்ன? இந்தக் காலத்தல் இவைகள் பார்க்க முடியாது என்ற கருத்துப்படப் பேசிக்கொள்கிறார்கள்.

ஆனல் எல்லாருடைய இல்லம் போல அல்லது எல்லாருடைய தேநீர்க்கடை போல் அல்லது எல்லாருடைய பலசரக்கு கடை போல சிவ தொண்டன் நிலயத்தை நிர்வாகம் ஒன்றுகக் கருதினுல் அப்படி பேசலாம் செய்யலாம் அல்லது நிர்வாகிகள் சிவ தொண்டன் நிலயத்தை ஹோட்டலாக கருதி அதனிடத்து அடியார்கள் சென்று தங்கி இன்று நடப்பது போல் சோறு சமைத்து பலருக்கும் கொடுக்க அதை உண்டு ஏப்பம் விட்டு எழுந்து செல்வதாக எண்ணினல் அவர்கள் நினைத்தபடி நடக்கலாம். எந்தப் பிழையையும் செய்யலாம். ''சொல்லெல்லாம் மோனம் செயலெல்லாம் மோனம்'' என்று சிவ தொண்டன் நிலயத்து மாபிள் விளம்பர பலகையில் பொறித்துவைத்திருக்கிறார்கள். சொல்லெல்லாம் மௌனம் செயலெல்லாம் மௌனம் என்பது பிழைகளைக் கண்டாலும் கண்ணை மூடிக் கொண்டிருப்பதென நினைத்தால் அவர்களது பேச்சை அவர்களது செயலை மேற்கொண்டு நாம் எண்ணி இங்கு குறிப்பிடப் போவதில்லை.

ஆனல் மௌனம் என்றால் என்ன? கண்ணைமூடி வாயையும் காதையும் பொத்திக் கொண்டு இருப்பதுதானே! இதை அவர்கள் தெரிந்து கொளளட்டும் மௌனம் யாருக்கு? எப்படிப்பட்டவர்க்கு? எவ்வாறு ஒழுகுவார்கு? கைகூடுமென பதை அவாகள் விளங்கிக் கொள்ளட்டும்.

உலகமென்று பேச அறியாது செயல் அற்று இருக்கும் நிலையை மௌனம் என்று பெரியோர்கள் சொல்லக் கேட்டுள்ளோம் ஆனதன்மையினுலே இந்நிலையை ஒருவர் பெற ஏனைய மக்கள் செய்கின்ற பழுதுகள் பலவற்றையும் செய்து கொண்டு பெறலாமோ?

சிவ தொண்டன் நிலயம் ஆரம்பித்ததன் நோக்கம் யோகசுவாமிகள் திருவுள்ளத்து உண்மையான அருள் நிலையைப் பெறுவதற்கு உதவவேண்டிய ஆலயங்கள் மிகமோசமான நிலயில் நிர்வகிக்கப் படுவதால் பொய்யும், புரளியும் கோவில்களில் நிலவுவதால் இந்தக்கோயில் எதிலும் போய்த் தரிசிதது தான் பெற்ற ஆத்மீக உயர்வை யாழ்ப்பாணத்திலுள்ள மக்கள் எவரேனும் பெறமாட்டார் என்பதால் மிகத் தூய்மையான வழிநடத்தப்பட்டு, அருள் பெருக்குவதற்கு தனித்த ஒரு இடம்வேண்டுமென்பதாலே சிவதொண்டன நிலயம் ஆரம்பிக்கப்பட்டது.

இன்று பாடல் பெற்ற தலங்கள் எல்லாம் யாருடைய கையில் சிக்கியுள்ளன. சிறிது எண்ணிப்பாருங்கள். அங்கே என்ன நிகழ்கிறது. அங்கு போய்த்தரிசித்து யாரேனும் ஒருவர் ஆத்மீக உயர்வு பெற்றுரோ எண்ணிப்பாருங்கள்.

சிவதொண்டன் நிலய நிர்வாகத்தல் இருப்பாகள் சிலர் மது, மாமிசம், வஞ்சனை, பொறுமை முதல் தீங்குகளால் பீடிக்கப்பட்டவர்கள். அவர்களது புறநடத்தைகள்பற்றி நான் இங்கு குறிப்பிடவேண்டிய அவசியமில்லை. அவர்களிற் சிலர் அரசாங்கத்தை ஏமாற்றியே பணம் பெற்றவர்களுண்டு. என்னை வெளியால்போ என்று கூறிய நபர் தனது மகளினுடைய புகையிரத அனுமதிப் பத்திரத்தில் பயணம்செய்து அதிகாரியிடம் அகப்பட்டு, முன்னுள் அரசாங்க அதிபர் ஒருவரின் தலையீட்டால் அவர் மறியல் போகாமல் தப்பியவர். அது மட்டுமல்லாது சிவதொண்டன் நிலயத்தைச் சேர்ந்த அநேகர் மயிலைக் கண்டு வான்கோழி வால்தூக்கியதுபோல யோகசுவாமிபோல் தாங்களும் நடிப்பவர்கள். இப்படி எத்தனையோ பேர் சிவதொண்டன் பேரில் தாங்களும் தங்கள் செலவில் ஆச்சிரமங்கட்டி சுவாமிக்கு நடித்ததுண்டு.

இப்படியயான ஒரு நிலை சிவ தொண்டன் நிலயத்தில் இருக்கும் காரணம் சிவதொண்டன் நிலயம் பணம் படைத்தோர் கையில் தங்கியிருப்பதாகும். இது அடியேனதும் பல சைவ அபிமானிகளதும் கருத்து.

''பெற்றிடு திருவினில் பிறந்த வெஞ்சினம், கற்றவர் உணர்வையும் கடக்கும்'' என்ற கந்தபுராணப் பாடல் இதற்குச் சான்றாகும். ஆகவே நாம் காட்டிய குற்றச்சாட்டிற்கு சிவதொண்டன் நிலயத்தார் எம்மை இகழ்ந்து கூறிபது இவாகளது பேதைத்தனத்தைப் பெருக்கியதன்றி அவர்க்கு நன்மையோ பெருமையோ வரப்போவதில்லை. நாம் சொல்வது தவறாக இருந்தால் தம் பத்திரிகை மூலம் இதற்குப் பதில்தரட்டும்.

---

இப்பத்திரிகை கொக்குவில் மேற்கில் இருக்கும் வை.நடலையா அவர்களால் சிவநெறி வளர்ச்சியின் பொருட்டு சந்திரதீப அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.